# உத்தம நம்பி வைபவம்

## (ஸ்ரீரங்கம் கோயில் சரித்திரம்)

இரண்டாம் பதிப்பு

---

ஸ்ரீரங்கம்

**எஸ். நரஸிம்ஹாசார்யார்**

எழுதி **1912**ல் வெளியிட்டது

ஸாஹித்ய சிரோமணி

ஸ்தாநிகம் பார்த்தஸாரதி அய்யங்காரால்

பரிசோதித்து விசதமாக மாற்றி அமைக்கப்பெற்றது

விக்ருதி பங்குனி

1961 | விலை 1 ரூ

கல்யாண் பிரஸ், திருச்சி.

http://acharya.org

*Title page of 1st Edition*

# Geneological account of UTTAMA NAMBI

## Warden, Sthalathar and Hereditary Trustee of the Srirangam Temple

## ஸ்ரீ உத்தம நம்பி வம்ச ப்ரபாவம்

---

இஃது

குரு பரம்பரா ப்ரபாவம், கோயிலொழுகு,
திவ்யஸூரி சரிதம், லக்ஷ்மீகாவ்யம், மதராஸ் ஓரியண்டல்
லைப்ராரியிலுள்ள மேகன்ஸி மானஸ்கிரிப்ட்,
திருச்சிராப்பள்ளி ஜில்லா கெஸடீர், விஜயநகர சரித்திரம்
முதலானவைகளினின்றும்
கிடைத்த விருத்தாந்தங்களைக்கொண்டு

**ஸ்ரீரங்கம் எஸ். நரஸிம்ஹாசார்யரால்** எழுதப்பட்டும்,
அநேகம் பெரியோர்களால் பரிசோதிக்கப்பட்டும்

மதராஸ் ஹோ அண்டு கம்பெனி பிரிமியர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1912

http://acharya.org

# PREFACE

*(to first edition of 1912.)*

The following few pages clearly unfold the very interesting history of the Great Uttama Nambi family to whose selfless exertion the sacred temple at Srirangam owes its present dignified position. Having offered Andal of divine birth in solumn marriage to the presiding deity of Srirangam and migrated from Srivilliputtur 49 centuries back, the noble family steadily built up a tradition at their land of adoption whereby Sri Ranganathaswami came to be recognised as one of their Kith and Kin, and the temple was conducted by them as if it was more than their own family concern. The family and the temple like so many other things mundane went through many vicissitudes of fortune and they stood or fell together. Foreign invasions, iconoclastic tendencies, minority of the 89th descendant, family dissensions, and the advent of the British power and influence paved the way for those who were brimful with envy at the unique greatness of the Uttama Nambi family, to slowly introduce the thin end of the wedge to clip the wings of that family by encroaching upon their exclusive rights and privileges, and to pose themselves subsequently as superior persons whose names also could with impunity, be pronounced along with the Uttama Nambis, in the same breath. Had Uttama Nambis willed, they cnuld have raised themselves to the peerage by not allowing a number of fat villages to escape from their firm grip on three different occasions. God has no doubt laid the family low in the sense that in the temple their voice is no longer the law that it was; but avarice never entered into their minds whatever other faults may be laid at their door as reasons for their downfall.

The authrities consulted and freely quoted in the book are of no mean order and even destructive criticism cannot detract from the sterling merits of the family. A careful study of the book will amply repay perusal.

May God restore the family to their former greatness is the humble prayer of

The Author,
(S. N.)

http://acharya.org

# பதிப்பாளர் முன்னுரை

தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் கோயில் சரித்திரமே அதிகமாகக் கலந்திருக்கிறது. தமிழ்க்கலை, தமிழ் இலக்கியம், தமிழர் நாகரிகம் எல்லாம் கோயில்களையே அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிபெற்றன.

கோயில் சரித்திரங்களையும், கோயில் இலக்கியங்களையும், பழந்தமிழ்ச் சிறப்புகளையும் ஆராய்ச்சி பண்ணும் கிரமத்தில் ஸ்ரீரங்கம் கோயிலில் பாதுகாக்கப்படுகிற பல பிராசீந வம்சங்களில் ஒன்றான உத்தம நம்பி வம்சத்தின் சரித்திரத்தையும் சர்ச்சை பண்ணநேரிட்டது. அதை அச்சிட விரும்பி அதில் பிரதானராயுள்ள உத்தமநம்பி ஸ்ரீ சடகோபாசார்யரின் உதவியை நாடினேன். அவருடைய பேருதவியாலும் அநுமதியாலும் இந்தப் புஸ்தகம் பூர்த்தியாயிற்று.

முன்புள்ளார் வெளியிட்ட புஸ்தகமே இப்போது மாற்றுருவில் வெளியிடப்பட்டது.

இந்த நூலாசிரியர் ஸ்ரீ நரஸிம்ஹாசார்யர் எழுதி வைத்திருக்கும் ஸ்ரீரங்கம் கோயில் தத்வம் மிகவும் பாராட்டத் தக்கது. அதுவும் விரைவில் வெளியாகும்.

ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்கார்,
பதிப்பாளர்.

---

(கவனக்குறைவால் ஏற்பட்ட சில அச்சுப் பிழைகளுக்கு மன்னியுங்கள்.)

http://acharya.org

# அட்டவணை


**மு. அத்தியாயம் :**

| | | |
|---|---|---|
| | பூர்வபீடிகை | ... 1—3 |

**இ. அத்தியாயம் :**

| | | |
|---|---|---|
| | வம்சாவளி | |
| 94— | உத்தம நம்பிகள் | ... 4—8 |

**மூ. அத்தியாயம் :**

| | | |
|---|---|---|
| | உ. நம்பிகளின் நிர்வாஹம் | ... 8-46 |
| 3—54 | உத்தம நம்பிகள் | ... 8—9 |
| 57— | சொல்லைப் நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி | ... 8—9 |
| 63—70 | உத்தம நம்பிகள் | ... 9-10 |
| 74-வது | உத்தம நம்பி : கருடவாஹந பண்டிதர் திவ்யஸூரி சரிதம் உடையவர் | ... 10-12 |
| 75-வது | ,, | ... 12 |
| 79-வது | எல்லை நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி துலுக்கர் படையெடுப்பு பிள்ளைலோகாசார்யர்— விஜயநகர ராஜ்யம் : ராஜாக்கள், ராஜபுருஷர்கள் | ... 12-17 |
| 80-வது | வழியடிமை நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி, ராஜாக்கள், ராஜபுருஷர்கள், மணவாள மாமுனிகள் | ... 17-24 |
| | சக்ர ராயர் | ... 25-28 |
| | திம்மணார்யர் | ... 29 |
| 81-வது | ராஜாக்கள் பெருமாள் உத்தம நம்பி | ... 29-31 |


http://acharya.org

82-வது திருமலை நாத உத்தம நம்பி—
லக்ஷ்மீ காவ்யக்காரர் ... 31-34

83-வது குடல் சார வாளா நாயனார் ... 34-36

84-86 உத்தம நம்பிகள் ... 36-37

சொக்கநாத நாயகர் தாம்பரப் பட்டயம் ... 37

கோயில் கிராமங்கள் ... 38-40

மோஹினிப் பணம் ... 40-41

88-வது உத்தம நம்பி ... 42

மஹாராஷ்டிர ராஜ்யம்

89-வது உத்தம நம்பி நவாப் ராஜ்யம் ... 42

90-வது ,, இங்கிலீஷ் ராஜ்யம் ... 42-43

உத்தம நம்பி சிங்கு அய்யங்கார் ... 44

94-வது உத்தம நம்பி சடகோபாசார்யர் ... ,,-46

**நா. அத்தியாயம்:**

உத்தம நம்பி கைங்கர்யங்களும், மரியாதைகளும் ... 46-52

பரமபதநாதன் ஸந்நிதி ... 50

கருடன் கோயில் ... 51

திருக்கார்த்திகை பிரம்மரதம் ... 52-54

தர்மகர்த்தா பாத்யம் ... 54-55

**ஐ. அத்தியாயம்:** ... 55-57

லக்ஷ்மீ காவ்யம்

**ஆ. அத்தியாயம்:** ... 58

கோயிலொழுகு

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீவைநதேயாய நம:

# உத்தம நம்பி வைபவம்

(ஸ்ரீரங்கம் கோயில் சரித்திரம்)

---

## முதல் அத்யாயம்

---

### பூர்வ பீடிகை

இரண்டு வருஷத்துக்குமுன் போதுபோக்காக Trichinopoly District Gazetteer என்னும் திருச்சிராப்பள்ளி ஜில்லா சரித்திரத்தைப் படித்துக்கொண்டிருக்கையில், ஸ்ரீரங்கம் கோயிலைப்பற்றி அடியில்கண்ட வாக்கியங்களை கவனித்தேன்.

"Very little is known for certain about the history of the temple. An elaborate Sthala Purana gives a legendary account of its origin; and another vernacular document, the **Koil Olugu*** contains a good deal of information, some of which is probably historical about the fortunes of the place. One of the Mackenzie *Mss* also gives an account of the geneology of the high priest† and the fortunes of the temple.

---

*Note*:—*This describes the benefactions of the various people to the building at various times. Some of it appears to be derived from the inscriptions and it has undoubtedly some historical value.

† Geneological account of the Uttama Nambis Wilson's catalogue Page 428.

http://acharya.org

இந்த வாக்கியங்களால் வில்ஸன்ஸ் கேடலாக் பார்க்க நேரிட்டது. அதில் (Geneological Account of Uttam Nambi, **Warden** of the Srirangam Temple) ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாஹகரும் ரக்ஷகருமான உத்தம நம்பியினுடைய வம்சாவளி—என்ற பெயர்மட்டுமே கிடைத்தது. மேகன்ஸி மானஸ்க்ரிப்டைப் பார்த்ததில் அந்த வம்சாவளி புஸ்தகம் கிடைக்கலாயிற்று.

உத்தமநம்பி பரம்பரைக்கு கூடஸ்தர் பெரிய திருவடி ஐயன் உத்தமநம்பி. அவர் பெரியாழ்வாருடைய பேரன். பெரியாழ்வார்முதல் தொண்ணூறு தலைமுறை வரையிலுள்ள உத்தமநம்பிகளின் வைபவம் அந்த வம்சாவளியில் கிடைக்கிறது.

பெரியாழ்வார் தம்முடைய திருமகளான ஆண்டாளை ஸ்ரீரங்கநாதனுக்கு பாணிக்ரஹணம் பண்ணிக்கொடுக்க, ஸ்ரீராமாண்டார் என்னும் புத்ரரும் தாமுமாய் அவளை அநேகம் திருவாபரணம் முதலான வரிசைகளோடு ஸ்ரீரங்கம் கோயிலில் கொண்டுவந்துவிட்டார். எம்பெருமானுடைய ஸந்நிதிக்குள் நுழைந்தவுடன் ஆண்டாள் அவனோடு ஐக்யமடைந்தாள். பெரிய பெருமாள் பெரிதும் திருவுள்ள முகந்து அவளுக்கு ஐயரான ஆழ்வாரை "ஐயன்" என்றும், அவர் குமாரரான ஸ்ரீராமாண்டாரை "பிள்ளை ஐயன்" என்றும் அருளப்பாடிட்டு அழைத்து, தீர்த்தம் பரிவட்டம் முதலான ப்ரஸாதங்களை அநுக்ரஹித்து, தம்முடைய ஆதீனங்களை நிர்வஹித்துக்கொண்டு, சொத்துக்களுக்கெல்லாம் கருடமுத்ரை இடச் சொல்லி, ஸ்ரீரங்கத்திலேயே நித்யவாஸம் பண்ணும்படி நியமித்தருளினர்.

http://acharya.org

பெரியாழ்வார் பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரிய திருவடிநாயனார் குலத்தில் முகுந்தபட்டருக்குக் குமாரராக அவதரித்த பிராம்மணோத்தமர். கலி பிறந்த 46க்கு மேல் செல்லாநின்ற க்ரோதந நாம ஸம்வத்ஸரம், ஆனி மாஸம், 9-ம் தேதி, ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் பெரியாழ்வார் அவதரித்தார். கலி 105-ம் வருஷத்தில் ஆண்டாளுக்கும் அரங்கனுக்கும் திருக்கல்யாணம் நடந்தது.

பெரியாழ்வார் பெரிய திருவடிநாயனார் வம்சத்தில் அவதரித்தவராகையால் வேதஸ்வரூபியான கருடனோடு அவருக்குப் பிறவியிலேயே ஸம்பந்தமுண்டாயிற்று. ஸ்ரீவில்லிபுத்தூரில் நடக்கும் கல்யாணத்துக்கு ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாதனை எழுந்தருளப் பண்ணிவந்த கருடன் ஆண்டாளும் அரங்கனுமாயுள்ள சேர்த்தியில இடம் பெற்று, இன்றைக்கும் அங்கே ஓரே ஆஸநத்தில் மூவரும் விளங்குகிறார்கள். இப்படி பிறவியாலும் கல்யாணத்தாலும் ஸம்பந்தம் பெற்ற கருடனையே உத்தமநம்பி-வம்சத்துக்கு உற்ற இலச்சினையாக பெரியபெருமாள் அநுக்ரஹித்தார். ஸ்ரீரங்கம் கோயில் கருவூல அறைக்கும் திருவாபரணப் பெட்டிகளுக்கும் உத்தம நம்பி முத்ராதிகாரியாகி இன்றைக்கும் கருடமுத்ரையே வைக்கப்படுகிறது.

பெரியாழ்வார் குமாரரான பிள்ளை ஐயன் என்கிற ஸ்ரீராமாண்டாருடைய குமாரர் பெரியதிருவடி ஐயன். இவரைப் பெருமாள் உத்தம நம்பிள்ளை என்று அருளப்பாடிட்டு அழைத்தார். பிள்ளை ஐயன் குமாரரான உத்தம நம்பிள்ளைக்கு பிள்ளை ஐயன் உத்தம நம்பி என்று பட்டப் பேராயிற்று. அவருடைய திருமாளிகை 'ஐயன் திருமாளிகை' என்று வழங்கிற்று.

http://acharya.org

# இரண்டாம் அத்யாயம்

## வம்சாவளி

பெரியாழ்வார்முதல் உத்தமநம்பி பரம்பரையிலிருந்த தொண்ணூறு தலைமுறைக்காரர்களின் பெயர், ஜீவகாலம், அவரவர்கள் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் செய்த கைங்கர்யம் எல்லாம் மேகன்ஸி மேனஸ்க்ரிப்டிலுள்ள வம்சாவளிப்படி இங்கே எழுதப்படுகிறது. இதில் மூன்றாமவரான பெரிய திருவடிஐயன்முதல் நாளது வரையிலுள்ள ஒவ்வொரு உத்தமநம்பியும் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி ஸ்ரீகார்யம் நிர்வஹித்துவருகிறார்கள். அவர்களுடைய விசேஷத்தை அடுத்த மூன்றாவது அத்யாயத்தில் விவரமாக எழுதுகிறேன் :—

| வரிசை | பெயர் | வயஸ்ஸு | | |
|---|---|---|---|---|
| 1 | பெரியாழ்வார் (ஐயன்) | ௵ 110 | 0 | 0 |
| 2 | ஸ்ரீராமாண்டார் (பிள்ளை ஐயன்) | 70 | 0 | 0 |
| 3 | பெரியதிருவடி ஐயன் (உத்தமநம்பிள்ளை) (1) (பிள்ளை ஐயன் உத்தமநம்பி) | 60 | 0 | 0 |
| 4 | திருமலைநாத ஐயன் உத்தம நம்பி (1) | 50 | 3 | 16 |
| 5 | பெரியதிருவடி ஐயன் உத்தமநம்பி (2) | 65 | 0 | 0 |
| 6 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (1) | 50 | 0 | 0 |
| 7 | பெரிய ஐயன் உத்தமநம்பி (1) | 40 | 2 | 14 |
| 8 | பெரியதிருவடி ஐயன் உத்தமநம்பி (3) | 50 | 0 | 0 |
| 9 | சின்னஐயன் உத்தமநம்பி (1) | 69 | 0 | 0 |
| 10 | அனந்த ஐயன் உத்தமநம்பி (1) | 60 | 0 | 0 |
| 11 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (2) | 50 | 0 | 0 |
| 12 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (1) | 70 | 0 | 0 |

http://acharya.org

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | வரதராஜ உத்தமநம்பி (1) ஷரூ | 60 | 1 | 15 |
| 14 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (3) | 60 | 0 | 0 |
| 15 | திருமலைநாத ஐயன் உத்தமநம்பி (2) | 59 | 0 | 0 |
| 16 | பெரிய ஐயன் உத்தமநம்பி (2) | 50 | 0 | 0 |
| 17 | குழந்தைஐயன் ஸ்ரீரங்கராஜ உத்தம நம்பி (1) | 99 | 0 | 0 |
| 18 | அனந்த ஐயன் உத்தமநம்பி (2) | 70 | 0 | 0 |
| 19 | ஸ்ரீரங்கராஜ உத்தமநம்பி (1) | 60 | 0 | 0 |
| 20 | திருமலைநாத ஐயன் உத்தம நம்பி (3) | 56 | 3 | 3 |
| 21 | வரதராஜ உத்தமநம்பி (2) | 57 | 0 | 0 |
| 22 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (2) | 67 | 0 | 0 |
| 23 | அனந்தஐயன் உத்தமநம்பி (3) | 62 | 0 | 0 |
| 24 | சின்ன ஐயன் உத்தமநம்பி (2) | 59 | 0 | 0 |
| 25 | திருமலைநாத உத்தமநம்பி (1) | 65 | 0 | 0 |
| 26 | முத்து ஐயன் உத்தமநம்பி என்கிற ஸ்ரீரங்கராஜ உத்தம நம்பி (2) | 56 | 0 | 0 |
| 27 | தெய்வசிகாமணி ஐயன் உத்தமநம்பி (1) | 70 | 0 | 0 |
| 28 | ஸ்ரீரங்கராஜ உத்தமநம்பி (3) | 66 | 0 | 0 |
| 29 | வரதராஜ உத்தமநம்பி (3) | 59 | 5 | 4 |
| 30 | அனந்த ஐயன் உத்தமநம்பி (4) | 55 | 0 | 0 |
| 31 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (3) | 65 | 0 | 0 |
| 32 | பெரியபெருமாள் உத்தமநம்பி | 70 | 9 | 25 |
| 33 | பெரிய திருவடி ஐயன் உத்தமநம்பி (4) | 60 | 0 | 0 |
| 34 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (4) | 61 | 7 | 1 |
| 35 | ரகுநாத உத்தமநம்பி (1) | 55 | 3 | 12 |
| 36 | ஸ்ரீநிவாஸ உத்தமநம்பி (1) | 53 | 2 | 0 |
| 37 | அனந்த ஐயன் உத்தமநம்பி (5) | 60 | 0 | 0 |

http://acharya.org

| | | | | |
|---|---|---|---|---|
| 38 | வரதராஜ உத்தமநம்பி (4) (ஹு) | 49 | 0 | 0 |
| 39 | ஸ்ரீரங்கநாத (உத்தமநம்பி) | 61 | 3 | 9 |
| 30 | க்ருஷ்ண ஐயன் உத்தமநம்பி (1) | 61 | 0 | 0 |
| 41 | திருவேங்கடநாத ஐயன் உத்தமநம்பி (1) | 57 | 2 | 8 |
| 42 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (5) | 30 | 0 | 0 |
| 43 | பெரியதிருவடி ஐயன் உத்தமநம்பி (5) | 44 | 0 | 0 |
| 44 | ஸ்ரீரங்கராஜ உத்தமநம்பி (4) | 30 | 3 | 3 |
| 45 | திருமலைநாத ஐயன் உத்தமநம்பி (4) | 40 | 0 | 0 |
| 46 | குமார வரதராஜ உத்தமநம்பி (5) | 50 | 9 | 0 |
| 47 | ஸ்ரீநிவாஸ உத்தமநம்பி (2) | 49 | 0 | 0 |
| 48 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (5) | 59 | 0 | 3 |
| 49 | திருவேங்கடநாத ஐயன் உத்தமநம்பி (2) | 42 | 6 | 9 |
| 50 | பெருமாள் ஐயன் உத்தமநம்பி | 68 | 3 | 13 |
| 51 | நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (6) | 47 | 2 | 5 |
| 52 | க்ருஷ்ண ஐயன் உத்தமநம்பி (2) | 49 | 0 | 0 |
| 53 | திருமலைநாத ஐயன் உத்தமநம்பி (5) | 56 | 4 | 7 |
| 54 | திருவேங்கடநாத ஐயன் உத்தமநம்பி (3) | 57 | 0 | 0 |
| 55 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (6) | 37 | 10 | 0 |
| 56 | திருவடி ஐயன் உத்தமநம்பி | 62 | 0 | 0 |
| 57 | சொல் நிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி —என்கிற நம்பெருமாள் ஐயன் உத்தம நம்பி (7) | 53 | 0 | 27 |
| 58 | சின்ன ஐயன் உத்தமநம்பி (3) | 37 | 0 | 0 |
| 59 | ஸ்ரீரங்கநாத உத்தம நம்பி (7) | 49 | 0 | 0 |
| 60 | திருவேங்கடநாத ஐயன் உத்தமநம்பி (4) | 61 | 2 | 3 |
| 61 | ஸ்ரீநிவாஸ உத்தமநம்பி (3) | 55 | 0 | 0 |
| 62 | ரகுநாத உத்தமநம்பி (2) | 38 | 0 | 0 |

http://acharya.org

| | | | | |
|---|---|---|---|---|
| 63 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (8) வரு | 50 | 0 | 0 |
| 64 | கோவிந்த ஐயன் உத்தமநம்பி | 39 | 0 | 0 |
| 65 | தெய்வசிகாமணி ஐயன் உத்தமநம்பி (2) | 66 | 3 | 7 |
| 66 | வரதராஜ உத்தமநம்பி (6) | 59 | 0 | 0 |
| 67 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (9) | 49 | 0 | 0 |
| 68 | அனந்த ஐயன் உத்தமநம்பி (6) | 56 | 2 | 10 |
| 69 | க்ருஷ்ண ஐயன் உத்தமநம்பி (3) | 56 | 2 | 17 |
| 70 | பெரிய ஐயன் உத்தமநம்பி (3) | 60 | 0 | 0 |
| 71 | ஸ்ரீரங்கநாத உத்தமநம்பி (10) | 52 | 0 | 0 |
| 72 | திருவேங்கடநாதஐயன் உத்தமநம்பி (5) | 63 | 0 | 0 |
| 73 | பெரிய ஐயன் உத்தமநம்பி (5) | 67 | 1 | 1 |
| 74 | (மஹாகவி) ஸ்ரீநிவாஸஉத்தமநம்பி (4) (கருடவாஹந பண்டிதர், கவி வைத்ய புரந்தரர்) | 69 | 0 | 0 |
| 75 | ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பி (1) | 43 | 0 | 0 |
| 76 | வரதாசார்ய உத்தமநம்பி | 40 | 0 | 0 |
| 77 | ராமாநுஜாசார்ய உத்தமநம்பி | 53 | 1 | 7 |
| 78 | ஸ்ரீநிவாஸாசார்ய உத்தமநம்பி (1) | 31 | 0 | 0 |
| 79 | எல்லைநிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி என்கிற க்ருஷ்ணராய உத்தமநம்பி | 79 | 0 | 0 |
| 80 | வழியடிமை நிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி என்கிற ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பி (2) | 68 | 0 | 0 |
| 81 | ராஜாங்கள பெருமாள் உத்தமநம்பி என்கிற க்ருஷ்ணமாசார்ய உத்தமநம்பி | 72 | 0 | 0 |
| 82 | திருமலைநாத உத்தமநம்பி (2) | 67 | 0 | 0 |

http://acharya.org

83 குடல் சாரவாளா நாயனார் என்கிற சின்ன க்ருஷ்ணராய உத்தமநம்பி ௵ 52 1 8
84 பெரியதிருவடி ஐயன் உத்தமநம்பி (6) 53 0 0
85 குழந்தைஐயன் ஸ்ரீரங்கராஜ உத்தமநம்பி(2) 38 1 0
86 ஸ்ரீநிவாஸாசார்ய உத்தமநம்பி (2) 40 0 0
87 நம்பெருமாள் ஐயன் உத்தமநம்பி (8) 45 7 0
88 ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பி (3)
89 ஸ்ரீநிவாஸாசார்ய உத்தமநம்பி (3) 18 0 0
90 உத்தமநம்பி ஸ்ரீரங்காசார்யர் (89-க்குப் பிறகு ஸ்வீகாரம்)
91 உத்தமநம்பி நரஸிம்ஹாசார்யர்
92 உத்தம நம்பி ஸ்ரீ ரெங்காசாரியர்
93 ,, தாத்தாசாரியார்
94 ,, சடகோபாச்சாரியார்

மூன்றாம் அத்யாயம்

## உத்தமநம்பிகளின் கோயில் நிர்வாஹம்

பெரியாழ்வாருக்குப் பேரனாய் ஸ்ரீராமாண்டாருக்குக் குமாரனுமான பெரியதிருவடி ஐயன் உத்தம நம்பிள்ளை என்ற மூன்றாம் தலைமுறைக்காரர் முதல்முதலாக பெருமாள் நியமனத்தின்படி ஸ்ரீரங்கஸ்ரீயை நிர்வாஹம் பண்ண ஆரம்பித்தார். அவர் முதல் எழுபத்திமூன்று தலைமுறை வரையில் நிர்வாஹம் ஸாதாரணமாக நடந்தது.

அதாவது :—

3. முதல்முதலாக ஸ்ரீரங்கஸ்ரீ நிர்வாஹம் பண்ணினார்.
4. தேவராஜ மஹாராஜா மூலமாய் முத்துக்குடை தங்க ஸிம்ஹாஸநம் முதலானவை ஸமர்ப்பித்தார்.

http://acharya.org

11. நவரத்ந அங்கி ஸமர்ப்பித்தார்.
13. நவரத்ந கிரீடம் ஸமர்ப்பித்தார்.
15. தங்க வட்டில்கள் ஸமர்ப்பித்தார்.
21. வெள்ளிக்குடம் முதலானவை ஸமர்ப்பித்தார்.
27. கோபுர மண்டப ப்ராகார ஜீர்ணோத்தாரணம் பண்ணினார்.
28. ஸ்தலத்துக்கு வந்த இடையூறுகளைத் தீர்த்தார்.
35. த்வஜாரோஹண மண்டப ஜீர்ணோத்தாரணம் பண்ணினார்.
39. திருவாபரணங்கள் ஸமர்ப்பித்தார்.
47. திருவாபரணங்கள் ஸமர்ப்பித்தார்.
54. பெருமாள் உபய நாச்சிமார்களுக்கு தங்கக் கவசங்கள் கிரீடங்கள் ஸமர்ப்பித்தார்.

ஸ்ரீரங்கநாச்சியாருக்கு கவசம் கிரீடம் ஸமர்ப்பித்தார்.

57. சொல்லை நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி என்கிற நம் பெருமாளையன் உத்தமநம்பி :—

இவர் காலத்தில் தேசாதிபதியான ப்ரபு ஸ்ரீரங்க நாச்சியாரைத் திருவீதி எழுந்தருளப்பண்ணி உத்ஸவம் நடத்தவேணுமென்று சொல்ல, இவர் கூடாதென்ன, ப்ரபுவும் "அக்கரையில்லை அப்படியே நடக்க வேணும்" என்று பலவந்தம் பண்ண, கழுத்தை அறுத்துக் கொண்டார் இந்த உத்தம நம்பி. உடனே நாச்சியாரே ஆவேசமுகமாகத் தனக்கு விருப்பமில்லாமையைத் தெரிவித்து தடைசெய்தாள். நாச்சியாரால் இவருடைய சொல் நிலைநாட்டப்பட்டதுபற்றி இவருக்கு சொல் நிலையிட்ட பெருமாள் என்று பட்டப்பெயராயிற்று.

63. நாச்சியார்கோயில் சந்தநமண்டபம் முதலியவற்றை ஜீர்ணோத்தாரணம் பண்ணினார்.

http://acharya.org

64. பெருமாளுடைய ஸந்நிதி வாசலுக்கும், அதற்குட்பட்ட திருவணுக்கன் திருவாசலுக்கும் தங்கம் பூசுவித்தார்.

70. ஆதிசேஷனுடைய சிரஸ்ஸுகளுக்கு தங்கக் கவசம் ஸமர்ப்பித்தார்.

இனி எழுபத்து நாலாம் தலைமுறையிலிருந்து அவரவர்கள் காலத்தில் நடந்த விசேஷம் காண்க:—

74. கருடவாஹந பண்டிதர்:—

இவருக்கு ஸ்ரீநிவாஸ உத்தமநம்பி என்று திருநாமம். இவர் சிறந்த கவியாயிருந்ததால் ஸ்ரீநிவாஸ மஹாகவி என்றும், வைத்தியம் வல்லராயிருந்ததால் கவித்வமும் வைத்யமும் சேர்ந்து கவி வைத்ய புரந்தரர் என்றும் பிரஸித்திபெற்றார். இவர் ஸ்ரீராமாநுஜருடைய காலத்திலிருந்தவர்.

உடையவர் பெருமாள்-நியமனத்தின் பேரில் ஸ்ரீரங்கத்துக்கு அழைத்துவரப்பட்டபோது கருடவாஹநபண்டிதர் அவரை எதிர்கொண்டழைத்து எல்லா வரிசைகளோடும் வரவேற்றார்; உடையவருக்கு அந்தரங்கராயிருந்து கொண்டு அவர் நியமித்தபடி கோயில் காரியங்களை நிர்வஹித்தார்.

[1] பிரதிதினமும் உபாதாநம் பண்ணிக்கொண்டே தேஹயாத்ரையை நடத்திவந்த கூரத்தாழ்வான் ஒருநாள் மழையினால் வெளியே போகமாட்டாமல் பட்டினியாயிருப்பதுகண்டு பெரியபெருமாள் தம்முடைய பெரிய

1 குருபரம்பரை, ராமாநுஜார்ய திவ்ய சரிதை.

http://acharya.org

அவஸரம் அக்காரவடிசிலே மேளதாளத்தோடு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பும்படி கருடவாஹந பண்டிதருக்கு நியமித்தார். ஆழ்வானும் ஆண்டாளும் அந்த ப்ரஸாதத்திலிருந்து இரண்டு திரளை எடுத்து அமுது செய்து, பெருமாளுடைய க்ருபையை நினைத்து நினைத்து நெஞ்சுருகினார்கள். இந்த இரண்டு திரள் ப்ரஸாதமே பட்டரும் ஸ்ரீராமப்பிள்ளையும் அவதரிக்க ஹேதுவாயிற்று.

[2] ஒருநாள் முதலியாண்டான் பெருமாளுக்கு ததியோதநத்தோடு நல்ல நாவல் பழத்தையும் ஸமர்ப்பித்து அமுதுசெய்வித்தபின்பு, உடையவர் எழுந்தருளி பெருமாள் திருமுக மண்டலம் வாடியிருந்ததுகண்டு விசாரித்து, தயிர் சாதத்தோடு நாவல் பழத்தையும் சேர்த்ததற்காக நிக்ரஹித்தார். உடனே, தம்முடைய சிஷ்யராய் வைத்யம் வல்லுநரான கருடவாஹந பண்டிதரைக்கொண்டு மாற்றுப் பொருளால் சிகித்ஸை நடந்தது. கோயிலில் ஆரோக்ய சாலைக்கு அதிதேவதையாய் புராணப்ரஸித்த மூர்த்தியான தந்வந்தரியை சாஸ்த்ரமுறைப்படி கருடவாஹந பண்டிதரைக்கொண்டு பிரதிஷ்டிப்பித்து அந்தக்கோயிலை அவருக்கே கட்டளையிட்டு, பெருமாளுக்கு ராத்திரி நித்தியம் கடைசி நைவேத்யமான குடிநீர்ப்பால் தந்வந்தரி கோயிலிலிருந்து காய்ச்சி சுத்தமாக வரும்படி உடையவர் திட்டம் பண்ணியருளினார்.

ஆழ்வார்களின் சரித்திரம் கருடவாஹந பண்டிதர் காலம்வரையில் யாராலும் எழுதப்படாமல் உபதேசக்ரமமாகவே இருந்தது. மஹாகவியான கருடவாஹந பண்டிதர்

---

2 கோயிலொழுகு பக். 42, 43

http://acharya.org

ஆழ்வார்களின் சரித்திரத்தை திவ்யஸூரிசரிதம் என்று மஹாகாவ்யமாக எழுதி வெளியிட்டார். பதினெட்டு ஸர்க மாயுள்ள இந்த மஹாகாவ்யம் ஆழ்வார்கள், ஆண்டாள், மதுரகவி—ஆக பன்னிருவர் சரித்திரத்துக்குப்பிறகு உடையவர் சரித்திரத்தையும் சொல்லுகிறது.

நம்பிள்ளையின் பிரதான சிஷ்யரான பின்பழகிய பெருமாள் ஜீயரும் ஸ்ரீ வேதாந்ததேசிகரின் பிரதான சிஷ்யரான ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் இந்த திவ்ய ஸூரி சரிதத்தையே அநுஸரித்து குருபரம்பரா ப்ரபாவ மென்று தமிழில் எழுதினர்கள்.

**75. ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பி :—**

கருடவாஹந பண்டிதருக்குப்பிறகு ஸ்ரீரங்க ஸ்ரீகார்யம் நிர்வஹித்தார் இவர். உடையவர் திருநாட்டுக்கு எழுந் தருளினது இந்த உத்தமநம்பி காலத்தில். உடையவர் இருக்கும்போதே இந்த கருடவாஹந பண்டிதர் திருநாட் டுக்கு எழுந்தருளிவிட்டார். திவ்ய ஸூரிசரிதத்தில் கடைசி யாயுள்ள பதினெட்டாவது ஸர்கம் உடையவரின் அந்திம காலவிருத்தாந்தத்தை மட்டும் சொல்லுகிறதேயன்றி அவர் திருநாடு அலங்கரித்ததைச் சொல்லவில்லை. உடையவரின் சரமகைங்கர்யத்தை நடத்திவைத்தது இந்த எழுபத்தைந் தாவது உத்தமநம்பி.

**79. எல்லைநிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி என்ற க்ருஷ்ண ராய உத்தமநம்பி :—**

[1] இவர் காலத்துக்குமுன் கி.பி. 1310ல் மாலிக் காபர் படையெடுத்து வந்து ஸ்ரீரங்கத்தைப் பாழாக்கினன்.

1. கோயிலொழுகு பக்கம் 106

http://acharya.org

அதனால் பிள்ளைலோகாசார்யர் முதலானார் பெருமாளை எடுத்துக்கொண்டு ஊர்ஊராகத் திரிந்து திருப்பதிமலையில் கொண்டு சேர்த்தார்கள். செஞ்சி ராஜாவான கொப்பண உடையார் திருமலையிலிருந்து ரங்கநாதனை எழுந்தருளப் பண்ணி செஞ்சியில் பூஜைபண்ணிக் கொண்டிருந்தார். (கி. பி. 1371)ல் இந்தக்ருஷ்ணராய உத்தமநம்பி விஜயநகர ராஜாவைக்கொண்டு துலுக்கப் படையை ஜயித்து விரட்டிவிட்டு, விஜயநகரம் துரைகள் விஜயநகரம் இரண்டாம் அரசரான புக்கராயர், அவருடைய குமாரரான ஹரிஹரராயர் இருவரையும் ஸ்ரீரங்கத்துக்கு அழைத்து வந்தார். செஞ்சி ராஜாவான கொப்பண உடையாரும் இவர்களுக்கு உதவியாயிருந்து, துலுக்கர்களை வென்று பெருமாளை ஸ்ரீரங்கம் கொண்டுவந்து சேர்த்தார். புக்க ராயர் காலத்தில் ராஜ்யம் கந்யாகுமாரி வரை பரவிற்று. சோழபாண்டிய மன்னர்கள் புக்கராயருக்கு கப்பம் செலுத்தினார்கள்.

[1] இந்த க்ருஷ்ணராய உத்தமநம்பியால் மேல்கண்ட துரைகளிடத்தில் தாராதத்தமாக 17,000 பொன் தானம் பெற்று அதைக்கொண்டு கோயிலுக்கு 106 க்ராமங்கள் வாங்கப்பட்டன. இது தவிர, [2] சகாப்தம் 1304 (கி.பி 1382) க்குமேல் ருதிரோத்காரி வருஷம் முதல் ஈசுவர வருஷம் வரையில் ஹரிஹர ராய மஹாராயர், விருப்பண உடையார், கொப்பண உடையார், முத்தய்ய தென்னாயகர், தம்மண்ண உடையார், ப்ரதாநி ஸோமப்பர், காரியத்துக்குக் கடவ அண்ணர், முதலானார்களிடம் 5000

(1) கோயிலொழு பக்கம் 107
(2) ,, 111, 112

http://acharya.org

பொன் வாங்கி அதைக்கொண்டு கோயிலுக்கு 13 கிராமங்கள் வாங்கப்பட்டன.

[1] சகாப்தம் 1207 (கி. பி. 1375)ல் திருவானைக்காவலுக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் எல்லைச் சண்டை உண்டாகி அதனால் பல சச்சரவுகள் ஏற்பட்டன. இவ்விஷயம் விஜயநகரம் துரைகளுக்குத் தெரிந்ததும், அவர் தன் குருவான வ்யாஸ உடையார் முதலானவர்களை மத்யஸ்தம் பண்ண அனுப்பினார். பெருமாளுக்கு ஸ்தானாதிபதியான உத்தமநம்பி ஈரப்பாவாடை உடுத்தி கையில் மழுவேந்தி கண்ணைக் கட்டிக்கொண்டு எந்தவழி போகிறாரோ அந்த வழியே பெருமாளும் எழுந்தருள வேண்டியதென்று வ்யாஸ உடையார் முதலான மத்யஸ்தர்கள் நிச்சயித்தார்கள். திருவானைக்காவலாரும் இதை அங்கீகரித்தனர். க்ருஷ்ணராய உத்தமநம்பி மத்யஸ்தர்களின் நிபந்தனைப்படி ஈரம் உடுத்தி மழுவேந்தி கண்ணைக்கட்டி அஷ்டாக்ஷர மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு எல்லை ஓடினார். அதனால் இவருக்கு எல்லைநிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி என்று பட்டப்பேராயிற்று. தான் எல்லையோடிநின்ற இடத்தில் பிரதானமாக பதினாறுகால் மண்டபமும் இரண்டொரு சிறு மண்டபங்களும் இந்த உத்தமநம்பியே கட்டிவைத்தார்

பெருமாள் நாச்சியார்களுடைய ஒவ்வொரு உத்ஸவத்திலும் கடைசி நாள் இன்றைக்கும் திருத்தாழ்வரை தாஸர் விண்ணப்பம் செய்யும் திருப்பணிப்பு மாலையில் உத்தமநம்பிக்காக ஏற்பட்ட

---

1 கோயிலொழுகு 109, 110.

http://acharya.org

மல்ல நிலையிட்ட தோளரங்கேசர் மதிளுள்பட்ட
எல்லை நிலையிட்ட வார்த்தையும் போலல்ல—நீதிதன்னால்
சொல்லை நிலையிட்ட உத்தமநம்பி குலம் தழைக்க
எல்லை நிலையிட்ட வார்த்தை எல்லோருக்கு எட்டெழுத்தே

என்ற பாசுரத்தில் எல்லைநிலையிடுகைக்கு ஆதாரமாயிருந்த அஷ்டாக்ஷரத்தின் சிறப்பும் 59வது உத்தமநம்பி ஸ்ரீரங்க நாச்சியார் அநுக்ரஹத்தால் தம்முடைய சொல்லை நிலையிட்ட விவரமும் தெரிகிறது.

[காவேரி வடகரை பூசமண்டபத்துக்கு மேற்கிலிருந்து ஸ்ரீரங்கத்து எல்லையைத்தொடங்கி வடக்காக ஓடும்போது, இப்போது புதிதாக உண்டான ஸ்ரீநிவாஸ நகர் கடைசித் தெருவை உள்படுத்தி எல்லை உண்டாயிற்று. அங்குள்ள சிறு பள்ளிக்கூடமே முன்பு பதினாறுகால் மண்டபம் இருந்த இடம். கோயிலைச்சேர்ந்த மண்டபம் காலக்ரமத்தில் நிலக்காரர்களுடையதாகி, நிலம் ஊர்ப்பொதுவாகி, சில அதிகாரிகளின் அசிரத்தையாலும், சில அதிகாரிகளின் அதிக்ரமத்தாலும் மண்டபம் இடித்து வீழ்த்தி காலி செய்யப்பட்டது. பங்குனித் திருநாள் எட்டாம் நாளில் பெருமாள் எல்லைக்கரை எழுந்தருளும்போது பூர்வம் பதினாறுகால் மண்டபத்தில் நடந்த மரியாதைகளை இப்போதும் அங்கே வெறுந்தரையில் உத்தமநம்பி அய்யங்கார் வ்யாஸராய மடத்தார் முதலானோர் பெற்றுக்கொள்கிறார்கள்.]

[1] இந்த க்ருஷ்ணராய உத்தமநம்பி விஜயநகரத்துக்குப்போய் ராயரைக் (ராஜாவைக்) கண்டு அவர் குமாரரான புக்கஉடையார் உத்தரவுப்படி அணியரங்கன் திருமுற்றத்தில் (திறந்த வெளியாயிருந்த துவஜஸ்தம்ப ப்ரதேசத்தில்) கீழ் புறத்தில் துலாபுருஷ மண்டபம் கட்டி வைத்தார். பிறகு ஹரிஹர ராயரும் விருப்புண உடை

1 கோயிலொழுகு பக்கம் 113.

http://acharya.org

யாரும் வந்து துலாபுருஷமேறிக் கொடுத்த பொன்னைக் கொண்டு கிருஷ்ணராய உத்தமநம்பி ரங்கவிமானத்தைப் பொன் மேய்ந்தார். அப்போது பெருமாளும் செஞ்சியி லிருந்து வந்து கோயிலில் சேர்ந்தார். நாநா தேசங்களி லிருந்து வந்த தேசாந்தரி ஜநங்கள் நன்றாக ஸேவிக்கும் படி சித்திரை ரேவதியில் திருத்தேராகி அவபிருதம் நடக்கும்படியாக விருப்பண உடையார்-பேரில் சித்திரைத்திருநாள் நடத்திவைத்ததும் கிருஷ்ணராய உத் தமநம்பிகளே. சித்திரை பிரம்மோத்ஸவத்துக்கும் இப்போ தும் பஞ்சாங்கத்திலும் கோயில் கணக்குகளிலும் விருப்பன் திருநாள் என்றே வ்யவஹாரம்.

[1] துலுக்கர் கலஹத்தில் யானையேற்றுமண்டபம் ஜீர்ண மாயிற்று. அதை கிருஷ்ணராய உத்தமநம்பிகள் ஜீர்ணோத் தாரணம் பண்ணிவைத்தார். யானை வாஹநத்தின்மேல் வைக்கப்படும் பூமாங்குத்தி என்ற புஷ்பாங்குசம யானை யேற்று மண்டபம் கட்டிவைத்ததற்கு உபகார ஸ்ம்ருதியாக வாஹநம் திருவீதி வலம் வந்து இறங்கினதும் உத்தம நம்பிக்கு ப்ரஸாதிக்கும்படி பெருமாள் அநுக்ரஹித்தார். இது உத்தமநம்பி பரம்பரையிலுள்ளவர்களுக்கு ஏற்பட்ட பல மரியாதைகளில் ஒன்றாக இன்றைக்கும் நடந்துவரு கிறது.

கிருஷ்ணராய உத்தமநம்பிகள் விஜயநகரம் ராஜாவான ஹரிஹரராயர் பேரால் பெருமாளுக்கு திருப்பள்ளிக்கட்டி லென்னுமோர் திவ்ய ஸிம்ஹாஸநம் பண்ணி ஸமர்ப்பித் தார். ஐந்நூறு வருஷத்துக்கு முன் உண்டான கட்டில்

1. கோயிலொழுகு பக்கம் 109

http://acharya.org

இப்போது இல்லையாகிலும் பின்புண்டாகும் கட்டிலுக் கெல்லாம் ஹரிஹரராயன் திருப்பள்ளிக் கட்டிலென்றே பேராம்படி அத்தனை பிரஸித்தமாயிருந்தது. இப்போதும் திருக்கார்த்திகையன்று திருமுகப்பட்டயம் சொல்லுகை யில் "நாம்......ஹரிஹரராயன் திருப்பள்ளிக் கட்டிலின் மேல் வீற்றிருந்து" என்றே பெருமாளும் அருளிச் செய் கிறார்.

[1]எல்லை நிலையிட்ட பெரிய கிருஷ்ணராய உத்தமநம்பி ஸ்ரீரங்க ஸ்தலத்துக்கு பல கைங்கரியங்களையும் உபகாரங் களையும் பண்ணிக்கொண்டு, ராஜவல்லபராயிருந்து, ராஜாவா யிருந்த ராயர் நிரூபத்தாலே நூற்றெட்டுத் திருப்பதி கைங் கரியங்களையும் ஆராய்ந்துகொண்டு 99 வருஷம் எழுந்தருளி யிருந்தார்.

80. வழியடிமை நிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி—என்கிற ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பி:—

இவர் எல்லைநிலையிட்ட பெருமாள் உத்தமநம்பியின் குமாரர். இவர் ஸ்ரீரங்கஸ்ரீகார்யம் நிர்வஹித்தார். சகாப்தம் 1329 (கி. பி. 1406)க்கு மேல் ஸர்வஜித்து வருஷம் முதல் ப்ரமோதூத வருஷம் வரையில். 44 வருஷத்தில் இவர் ராஜதானி விஜயநகரம்போய் பெருமாளுக்கு திருவிடை யாட்ட கிராமங்கள் வாங்கவேண்டுமென்று பலபேர்களிடத் திலும் வாங்கின பொன் 18,000க்கு சேர்த்த கிராமங்கள்

1. கோயிலொழுகு பக்கம் 114.



http://acharya.org

101. திருவிடையாட்ட கிராமத்துக்காக பொன்கொடுத்து உதவின விஜயநகரம் ராஜபுருஷர்களின் விவரம்:—

1. பெரியதேவ மஹாராயர்
2. விஜய பூபதி ராயர்
3. ராமசந்திர ராயர்
4. பெரிய விஜயராய மஹாராயர்
5. விஜயராய மஹாராயர்
6. பிரதாப ராயர்
7. சிக்கவுடைய ராயர்
8. மல்லிகார்ஜுந ராயர்
9. பூபதி ராயர்
10. திக்கடப்பே ஹரி ராயர்
11. புக்கன உடையார்
12. பார்க்கவதி ராய உடையார்
13. அந்நதேவ நாயகர்
14. கங்கதேவ நாயகன்
15. சிங்கதேவ நாயகன்—இவர்கள் அரசர்கள்
16. அந்நப்பையன் குமாரர் ஆதித்யராய உடையார் —சிற்றரசர்
17. சிக்க உடையார்
18. கம்பன உடையார் குமாரர் குரு ராய உடையார்
19. லக்கண உடையார்
20. தக்ஷிண ஸமுத்ராதிபதி லெக்க தென்னையகன் மகன் தென்னராய நாயகன்
21. தேவராய உடையார்

http://acharya.org

22. அக்கப்ப உடையார்

23. சிறு பசு விட்ட உடையார்

—இவர்கள் துர்காதிபதிகள்

ஆகிய இவர்கள் கையிலும் வன்னியநாயகன் கையிலும் தாராதத்தமாக வாங்கின 18,000 பொன்னுக்கு " துர்க்கங்கள் பிரிவுப்படி " (?) சேர்ந்த கிராமங்கள் 101.

[1] வழியடிமைநிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி காலத்தில் பெரிய ஜீயரென்னும் மணவாளமாமுனிகள் ஸந்யஸித்து கோயிலுக்கு எழுந்தருளினார். உத்தமநம்பிகள் அவரைப் பெருமாள் நியமன ப்ரகாரம் எதிர்கொண் டழைத்து ஸகல மரியாதைகளையும் ஸாதித்து த்ரிவிக்ரமன் திருவீதியில் பல்லவராயன் மடத்தில் எழுந்தருளப்பண்ணி வைத்தார். மணவாளமாமுனிகள் பாலின் நீர்மைபோல் வெளுப்பாயிருந்ததால் வெள்ளை ஜீயரென்றும் பிரஸித்தி உண்டாயிற்று. ஜீயர் திருமேனியை ஸேவித்துத் தேற மாட்டாமல் உத்தமநம்பி ஒரு நாள் பெருமாளிடம்போய் ஸேவித்துப் பரவசமாயிருக்க, * அரவினணைமிசைமேயமாய ஞான பெரிய பெருமாள்* அனந்தனென்னும் அணிவிளங்கு முயர் வெள்ளையணையான திருவனந்தாழ்வானைத் தொட்டுக் காட்டி " இவர் கிழர் ஜீயராக அவதரித்தருளினார். அவரு டைய நிறம் வெளுப்பென்று வியவஸித்திரும் " என்று அருளிச்செய்தார். உத்தமநம்பிகள் பீதபீதராய் அப் போதே வந்து, தமக்கு ஆப்தரும் ஜீயருக்கு முக்ய சிஷ்யருமான அண்ணனை அழைத்துக்கொண்டு ஜீயர் ஸந்

1. இந்த விவரம் யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்திலும், கோயி லொழுகு 116, 117 பக்கங்களிலும் காணலாம்.

http://acharya.org

நிதியிலே போய் தண்டம் ஸமர்ப்பிக்க, ஜீயரும் ஆயிரம் பணமுடிகளுடன் திருவனந்தாழ்வானைக ஸேவைஸாதிக்க, நடுநடுங்கி— ஆதிசேஷன் மேலிருந்து ஸேவை ஸாதிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தார். ஸ்வாமியும் ப்ரார்த்தனாநுகுணமாக அநுக்ரஹித்தார். மணவாள மாமுனி ஸந்நிதியில் இப்போதும் உத்தம நம்பிக்கு ஸேவை ஸாதித்தப்ரகாரமே ஒரு கம்பத்தில் மேற்குமுகமாக ஜீயர் சித்ரரூபமாக எழுந்தருளியிருக்கிறார். கம்பத்தின் இருபுறத்திலும் அண்ணனும் உத்தமநம்பியும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

ராத்ரி அகாலமா யிருந்தபடியினாலே மற்றைநாள் உத்தமநம்பி ஜீயர்ஸந்நிதிக்குச் சென்று அபசாரக்ஷாமணம் பண்ணிக்கொண்டு, தமக்கு ஆசிரயணம் ஸாதிக்கும்படி ப்ரார்த்தித்துப் பெற்றார். ஜீயரின் நியமனப்படி அண்ணனுக்கு ஆசார்ய புருஷ வரிசையாக பெரியநம்பிக்குப் பிறகு தீர்த்தமும், சந்தாடை அண்ணன்— என்று அருளப்பாடும் உத்தமநம்பியால் ஏற்பட்டது.

திருக்கார்த்திகையன்று ஆழ்வாருக்கு திருமுகப் பட்டயம் கொண்டுபோகும் தழையிடுவார் கைங்கர்யம் தம்முடையதாயிருந்ததை உத்தமநம்பி அண்ணனுக்குக் கொடுத்தார்.

பூர்வம் வல்லபதேவன் கட்டிவைத்த ஆண்டாள் ஸந்நிதி (வெளியாண்டாள் ஸந்நிதி) தம்முடைய தாயிருந்ததை அண்ணனுக்கே கொடுத்து விட்டார் இந்த வழியடிமை நிலையிட்ட பெருமாள் உத்தமநம்பி. அது முதல் அந்தக் கோயில், மரியாதை வருமானம் முதலானவை யாவும் அண்ணன் வம்சத்திலேயே இருந்து வருகிறது.

http://acharya.org

மணவாளமாமுனிகள் இந்த உத்தமநம்பி காலத்திலேயே திருநாடு அலங்கரித்தார். தம்முடைய திருநாளிகக்கு ஏற்பட்ட திருநக்ஷத்ரக் கட்டளை உத்தமநம்பியால் ணவாளமாமுனிகளுடைய தீர்த்தத்துக்காக ஸமர்ப்பிக்கப்ட்டது. திருநக்ஷத்ரத்துக்கு ஸந்நிதி கட்டளையோடு ுன்றைய கைங்கர்ய பரர்களுடைய வருமானத்தையும் சர்த்து அனுப்பி திருநக்ஷத்ரத்தையும் உத்தமநம்பி ாசுவதமாக நடத்த ஏற்பாடு செய்தார்

[1] இந்த வழியடிமை நிலையிட்ட உத்தமநம்பி கோயிாழ்வாரை (கர்ப்பக்ருஹத்தை) திருமஞ்சனம் பண்ணிவைத்து, அமுதுமண்டபமும் அழகியமணவாளன் திருண்டபமும் சாந்து மாடிவைத்தார். (அமுதுமண்டபம்-அமுதுபாறை உள்ள முன் மண்டபம். அழகியமணவாளன் திருமண்டபம்-சந்தனமண்டபம உள்ள ப்ரதேசம். சாந்து மாடிவைக்கை-சாந்து என்னும் குழவிச் சுண்ணம்பூசுவிக்கை);

சகாப்தம் 1354 (கி பி 1432)க்கு மேல் செல்லாநின்ற பரிதாபி வருஷம் அனுமந்தேவர் கோயிலை (திருப்பாணாழ்வாருள்ள வீர ஹநுமான் கோயிலை?) தக்ஷிண ஸமுத்ராதிபதி தென்னையகன் கைங்கர்யமாகக் கட்டிவைத்தார்.

சகாப்தம் 1356 (கி பி 1434)ல் கிழையூரான திருவானைக்காவல் காரர்களுக்கும் ஸ்ரீரங்கத்தாருக்கும் வெளித்திருமுற்றத்தில் மாடு மேய்வதைப்பற்றி விரோதம் வந்ததால் இந்த உத்தமநம்பி ஸ்ரீரங்கத்துக்கும் திருவானைக்காவலுக்கும் இடையில் எல்லை மதிள் கட்டிவைத்தார்.

(1) கோயிலொழுகு 115, 118, 119, 121 பக்கங்கள்.

http://acharya.org

(எல்லை மதிள் திருவானைக்காவல் தெப்ப மண்டபத்தின் வடமேற்கு மூலையில் கரை மட்டத்தில் இப்போதும் தென்படுகிறது. பெரிய ரோடுக்குக் கிழக்கில வயல்காடு வழியாக இந்த மதிள் கொள்ளிடத்தில் எல்லைக்கரை மண்டபம்வரை போகிறது). பெரிய திருமண்டபத்தில் உடையவர் மரக்கோப்பாக கட்டிவைத்த மண்டபம் கலஹத்தில் அக்நிதக்தமான படியினாலே தேவராஜன் கொறடும் திருமண்டபமும், மண்டபத்தின் கீழில் திருக்காவணப்பத்தியும இந்த உத்தமநம்பி கட்டிவைத்தார். (பெரிய திருமண்டபம் என்பது கருடமண்டபம். தேவராஜன் கொறடு-தேவப்பெருமாள் இருக்கும் திருச்கச்சி நம்பி ஸந்நிதியாகும்.)

[1] இந்த உத்தம நம்பி காலம் வரையில் வஸந்தோத்ஸவம் வருஷாவருஷம் திருககாவேரியில் நடந்துவந்தது. ஒரு வருஷம் வைகாசியிலேயே திருக்காவேரி ப்ரவாஹம் வந்து உத்ஸவம் நடவாமல் போயிற்று. கோயிலுக்குள்ளேயே பெரிதாய் ஒருகுளம் வெட்டி (கெடாக்குழி) வெட்டி, அதில் மய்ய மணடபமும், சுற்று மண்டபமும், அதற்குமுன் பெரிய மண்டபமும் போடுவித்து, தலைக்கோரையிலிருந்து குறம்புவைத்து அது வழியாக கெடாக்குழிக்கு ஜலம் விட்டு, அதிலே உத்ஸவம நடக்க ஏற்பாடு பண்ணி, அந்த உத்ஸவச் செலவுக்காக அந்தப்ப உடையாரைக் கொண்டு மல்லியம புத்தூரை பொலியூட்டாக ஸமர்ப்பித்தார் உத்தம நம்பி. இந்த கிராமத்துக்காக மோஹினிப்பணம் 850 ரூபாய் ஏற்பட்டு ஸர்க்காரிலிருந்து

(1) கோயிலொழுகு பக்கம் 119

http://acharya.org

இன்றைக்கும் கொடுக்கப்படுகிறது. வஸந்தம் திருநாள் முழுதும் மண்டபம் ஸேவை, விட்டவன் விழுக்காடு, முத லானவை உத்தம நம்பிக்கே ஏற்பட்டு இப்போதும் அந்த வம்சத்தாருடைய அனுபவத்தில் இருக்கின்றன.

[1] சகாப்தம் 1340 (கி. பி 1418)க்கு மேல் விகாரி வருஷத்தில் கந்தாடையார் ஆதீநத்துக்குச் சொந்தமான ஸமயம் மரியாதைவியவஸ்தை முதலானவைகளை, அவர்கள் தேசாந்தரஸ்தர்களாயிருந்தபடியால் அவர்கள் திரும்பி வருமளவும் பட்டர் தானே அநுபவித்து வருவதாய் ராயர் மநுஷ்யரான கொப்பண்ண திம்மராஜன் முன்னிலைக்கும் இந்த வழியடிமை நிலையிட்டபெருமாள் உத்தமநம்பி முன்னிலைக்கும் உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார். அடியில்கண்ட சுலோகத்தினாலும் இந்த விவரம் தெரிய வருகிறது.

ஸ்ரீமச்சகாப்தே நவலோகபாஜி
விகாரிணி ஹ்யுத்தமநம்பிநாயக:
வேதார்ய பட்டோபரி திம்மராஜோ
விதீர்ய பத்ரம ஸமயம் ததாக்ஹீத்

வேதார்ய பட்டோபரி ஸமயம் விதீர்ய திம்மராஜ: பத்ரம் ததா. அக்ரஹீத் என்று அந்வயம்.

சகாப்தம் 1343 (கி. பி. 1421)க்கு மேல இந்த உத் தமநம்பி விஜயநகரத்துக்குப்போய் கஜவேட்டை ப்ரதாப மஹாதேவரை சதுரங்கமாடி ஜயித்து ஸந்தோஷிப்பித்து, அவர்

http://acharya.org

1. கோயிலொழுகு பக்கம் 115.

கையிலே அநேகம் வரிசைகளைப்பெற்று, தம்முடைய தம்
பிக்கு ராயர் முத்திரையும் சக்கரராயர் என்கிற பட்டப்பெய
ருடன், ப்ரத்யேகமாக ஆதீநமும், ஸகல ஸ்வதந்த்ரங்களும்
உண்டாக்கிக்கொடுத்து, தம்முடைய ஆதீநத்துக்கும் சக்ர
ராயர் ஆதீநத்துக்கும் ஸம்பந்தமில்லாதபடி பண்ணிவைத்து.
தமக்கு ஸகலமான விருதுகளும் பெற்றுக்கொண்டு திரும்பி
னார். திரும்புகையில் திவ்யதேசங்களையெல்லாம் ஸேவித்து
அங்குள்ள ஸ்ரீகார்யங்களையும் பரிசோதனைபண்ணி ஸ்தலத்
துக்கு வந்து சேர்ந்தார். ஸ்தலத்தில் திருவிடையாட்ட
கிராமங்களை பரிசோதித்துக்கொண்டு திருவரங்கர் செல்
வத்தை சதசாகமாக வளர்த்துவைத்து, ஜீயர்கள்,
ஸ்ரீவைஷ்ணவர்கள், ஏகாங்கிகள் ஆசார்ய புருஷர்கள் எல்லா
ரையும் ஆதரித்துக்கொண்டு ராயர் ஸம்பந்தம் ராயர் விருதும்
பெற்று, கோயில் ஸ்ரீகார்யம் நிர்வஹித்துக்கொண்டு 68
வயஸ்ஸு எழுந்தருளியிருந்தார் இந்த உத்தமநம்பி. இவர்
விஜயநகரத்துக்குப் போகும்போதுகூட நக்ஷத்ரங்கள்
சூழ்ந்த சந்திரனைப்போல் அநேகம பிராமணர்களால் சூழப்
பட்டு எல்லாருக்கும் அந்நதானம் பண்ணிக்கொண்டு
'ம்ருஷ்டாந்நதாதா' என்ற பட்டத்தைப்பெற்று ராஜசின்னங்க
ளோடும் கருடனுக்கொப்பாக விளங்கினாரென்று
லக்ஷ்மீகாவ்யம் முதல் ஸர்க்கத்தில் சொல்லியிருக்
கிறது.

---

http://acharya.org

## சக்ர ராயர் (பூ சக்ர ராயர்)

வழிபடிமை நிலையிட்ட பெருமாள உத்தம நம்பியி
னுடைய தம்பி சக்ரராயர் மஹா வித்வானாயிருந்தார. அவர்
தமையனாருடன் விஜயநகரம் போனபோது அவருக்குத்
தனி ஆசனம் மரியாதை முதலியவை ஏற்பட்ட விவரம்
கீழே சொல்லப்பட்டது விஜயநகர ஸம்ஸ்தாநாதிபதியா
யிருந்த முதல் தேவராய மஹாராயரும் மஹா வித்வானா
யிருந்ததால் சக்ரராயர் தேவராயரோடு தர்க்க வாக்யார்த்
தங்களைப் பண்ணி அவரைத் தன்னுடைய பாண்டித்யத்தி
னால் ரஞ்சிப்பித்தார். வித்வானுடைய கௌரவத்தை
உணர்ந்த ப்ரபு சக்ரராயருடைய பாண்டித்யத்துக்கேற்ப
அவரை எப்படி கௌரவிக்கலாமென்று மந்திரியுடன்
ஆலோசித்தார். "ஸ்வாமி! நீங்கள் குடிப்பிறப்பினால் ஒரு
ராஜ்யத்துக்கு ராயராயிருக்க, சக்ரராயர் தம்முடைய வித்
வையினால் பூ சக்ரத்துக்கே (பூமண்டலத்துக்கே) ராயரா
யிருக்கிறார் இவருக்கு பூசக்ரராயர் என்று முடிசூட்டி
அதற்குத் தக்கபடி கௌரவிக்கவேணும்" என்றார் மந்திரி.
ராயரும் அதே பிரகாரம் செய்து. அநேகம் திரவியங்
களைக் கொடுத்து, அவருக்கு ஸ்ரீரங்கத்தில் தனியாக ஒரு
ஆஸனமும் உண்டாக்கி அனுப்பினார். ராஜாவினிடம்
கிடைத்த திரவியங்களைக்கொண்டு இவரும் பல கைங்கரி
யங்களைப் பண்ணினார். இவருக்குத் தனி ஆஸனம் உண்
டாகுமுன் "பிள்ளை ஐயன" என்று பேராயிருந்த உத்தம
நம்பி கோசம் இவர் காலத்தில் இரண்டாகப் பிரிந்து
"பிள்ளை ஐயன்" "சக்ரராயர்" என்று தேவஸ்தானம்
கணக்குகளில் முறை விதம் இரண்டாக இன்றைக்கும்
எழுதப்படுகிறது.

http://acharya.org

சக்ர ராயர் செய்த கைங்கர்யங்களுக்கு விவரம்:—

1. நம்மாழ்வார் ஸந்நிதிக்கு முன் திருமண்டபம் வடக்கு மதிமுகப்பு மண்டபமும், சந்திரபுஷ்கரணிக்கரை கல்ஹாரமும் (புந்நாகர்?) துலுக்கர்காலத்திலே சேதமான வைகளை சரிந்த இடங்களில் கட்டிவைத்தார்.

2. வைகுண்டநாதன் ஸந்நிதிக்கு தெற்கில் கல்லறை மண்டபமும், தெற்கு முகப்பு மண்டபமும் கட்டி வைத்தார். வைகுண்டநாதன், நாச்சியார், ஆழ்வார். ஆசார்யர்கள்—எல்லா மூர்த்திகளுக்கும் புழுகுகாப்பு சாத்திவைத்தார்.

3. அகளங்கன் திருவீதியில் மதிள் சரிந்துபோன இடங்களில் கட்டிவைத்தார்.

4. வடக்குத் திருவாசல் தென்புறத்தில் முன்னில் முகப்புத்திரு மண்டபமும வாசல் கொறடும் கிளர்த்தியாக (உயரமாக) கட்டிவைத்தார். (இது தந்வந்தரி மேடையும் பக்கத்து மண்டபமும்.)

5. சகாப்தம் 1337 (கி. பி. 1415)க்கு மேல் மந்மத வருஷத்தில் முன்பு பெரிய திருமண்டபத்தில் (கருட மண்டபத்தில்) சோழன் பிரதிஷ்டையான தாம கருடன் கலஹத்தில் பின்னமானபடியாலே, அதன் சகலங்களாலே அழகியமணவாளன் திருமண்டபத்திலே ஸந்நிதி கருடனை எழுந்தருளப்பண்ணுனார்.

மந்மதவர்ஷே ஜ்யேஷ்ட்டே ரவிவாரேச ரேவதீதாரே
ஸ்ரீசக்ரராயவிபுநா ஸ்ரீமாந் கருட: ப்ரதிஷ்டிதோ பூக்யை:

என்று தர்மவர்மா திருவீதியிலே இந்த விருத்தாந்தம் சிலா லிகிதம் பண்ணப்பட்டது.

http://acharya.org

6. பூர்வம் சோழன் பிரதிஷ்டையான சக்ரவர்த்தித் திருமகனையும் ஜீர்ணோத்தாரணம்பண்ணிவைத்து, அதிலே சூடிக்கொடுத்த நாச்சியாரையும் (உள்ளாண்டாளான உத்ஸவ விக்ரஹத்தை) ப்ரதிஷ்டிப்பித்து அந்த ஸந்நிதிக்கு திருமடைப்பள்ளியும் கட்டிவைக்தார் சக்ரராயர். (வெளியாண்டாள் ஸந்நிதியிலிருந்து ஒரு கலஹத்தில் உள்ளே சேர்க்கப்பட்ட ஆண்டாள் உத்ஸவ விக்ரஹம் இவர் காலத்தில் பிரதிஷ்டையாகி உள்ளாண்டாள்—என்று வியவஹரிக்கப்படுகிறது. முதலில் ஏற்பட்ட சக்ரவர்த்தித் திருமகன்—மூலவர்—பின்னால் உள்ளபடியே இருக்க, உத்ஸவ விக்ரஹங்களைத் தென்புறம் எழுந்தருளப்பண்ணி ஆண்டாள் சக்ரவர்த்தித் திருமகனுக்கும் முன்னால் இருக்கிறாள்).

7. மேலே சொன்ன மந்மத வருஷத்திலேயே தை மாஸம் புநர்வஸு நக்ஷத்ரத்தில் திருத்தேருள்ள பூபதி உடையார் திருநாளை (முன்போல) நடத்தி அந்தத்திருநாளுக்கு பொலியூட்டாக தொடையூரைக் கொடுப்பித்தார் சக்ரராயர்.

(தொடையூர் கொள்ளிடம் வடகரையில். பங்குனியில் ஜீயர்புரம் போகும்போது பெருமாள் கொள்ளிடக்கரை ஏறி தொடையூரில் உபயம் கண்டருளி சிலையாத்தி எழுந்தருளுகிறார்.)

8. சேரனைவென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்டபத்திலே (பவித்ரோத்ஸவ மண்டபத்தில்) பூர்வம் கூர நாராயண ஜீயா ப்ரதிஷ்டிப்பித்த வராஹ நாயனார் துலுக்கர் கலஹத்திலே பின்னமானதால் அவரையும் பிரதிஷ்டிப்பித்தார் சக்ரராயர்.

9. அந்தத் திருச்சுற்றில் ஆக்நேய பாகத்திலே பெரிய திருமடைப்பள்ளிக்கு (இப்போது "சுக்ரவாரப்

http://acharya.org

போடு" என்று பெயர். இதுதான் ஆதி மடைப்பள்ளி) வடக்கேயுள்ள சின்ன திருமடைப்பள்ளிக்கு முன்னில் முகப்பும் (ஒற்றைக்கால் மண்டபம்) கட்டுவித்து அதில் அரவிந்த நாச்சியாரையும் எறியருளப்பண்ணுவித்தார் சக்ரராயர்.

10. அந்நாத எம்பெருமான் (அந்த மூர்த்தி) கொறட்டுக்கு மேல்புறம் (துவஜாரோஹண மண்டபமுள்ள இடம்) கட்டுவித்ததும் சக்ரராயரே.

(அந்நமூர்த்தி நெய்க்கிணற்றின் பக்கலில் முன்பு இருந்த இடத்திலேயே இப்போதும் பின்னமாய் சுவரோரத்தில் ஒதுங்கிக் கிடக்கிறார்.)

11. இந்த (துவஜாரோஹண மண்டபமுள்ள) கொறட்டில் வடக்குத்தூணில் ஹநுமானை சக்ரராயர் எறியருளப்பண்ணினார்.

12. சேனை வென்றான் திருச்சுற்று திருநடை மாளிகை மேல்புறம் சேதமாகையில் வடக்கடையத் தூணும் நிறுத்தி பாவுகல் பேட்டு கட்டிவைத்தார்.

(துவஜ ஸ்தம்பமுள்ள இடத்துக்கே அணியாயங்கள் திருமுற்றமென்றும், சேனை வென்றான் திருமண்டபம் என்றும் பெயர். மண்டபம் போட்டு மறைத்தாலும் முற்றமென்ற வியவஹாரம் போகாது.)

13. ஆலிநாடன் திருக்கோபுரமான ஆர்ய பட வாசலும் துலுக்கர் காலத்தில் அக்நிபாதையால் சேதமாக, அதில் நிலைகால் முகவணை அருகணை கீழ்ப்படி மேல்ப்படி உளபட சக்ரராயர் கட்டிவைத்தார்.

---

## திம்மணார்யர்

வழியடிமை நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பிக்கு சக்ரராயரும திம்மணார்யரும் தம்பிகள். சக்ரராயர் வைபவம் சொல்லியாயிற்று.

திம்மணார்யர் என்னும் மூன்றுமவர் பாம்பு தன்னுடைய சட்டையை உரிப்பதுபோல தியாஜ்யமான ஐசுவர்ய போகங்களைத் துறந்து ஸந்யாஸாசிரமத்தில் பிரவேசித்தார். இவருடைய விருத்தாந்தம் லக்ஷ்மீகாவ்யத்தில் சொலப்பட்டிருக்கிறது. (கடைசியில் லக்ஷ்மீ காவ்யத்தைப்பற்றியும் சொல்லுகிற ப்ரஸ்தாவத்தில் இவருடைய விவரம் காணலாம்.) இந்த திம்மணார்யர் ஸந்யாஸியானபிறகு ஸ்ரீராமாநுஜபீடமான ஸ்ரீரங்க நாராயண ஜீயர் பட்டத்தில் எழுந்தருளியிருந்தார்.

---

**51 ராஜாக்கள் பெருமாள் உத்தமநம்பி என்கிற க்ருஷ்ணமாசார்ய உத்தமநம்பி:—**

வழியடிமை நிலையிட்டபெருமாள் உத்தம நம்பியினுடைய குமாரர் ராஜாக்கள் பெருமாள் உத்தமநம்பி [1]இவர் ஸ்ரீரங்க ஸ்ரீகார்யம் நிர்வஹித்த காலத்தில் பங்குனி மாஸம் ஆதி பிரம்மோத்ஸவம் 3-ம் நாளில் பெருமாள் ஜீயர்புரத்துக்குப் போகும்போதும், அங்கிருந்து வரும்போதும் குதிரை வாஹநமே ஏற்பட்டிருந்தது. ஜீயர்புரத்திலிருந்து கொள்ளிடக் கரை வழியாக பெருமாள் தெப்பக்குளத்தருகில் வரும்போது மழைக்கோப்பாயிருந்ததால் வடக்குவாசல் வழியாக வருவதை மாற்றி, மேற்கு வாச

---

(1) கோயிலொழுகு 124-ம் பக்கம்.

http://acharya.org

லாலே த்ரிவிக்ரமன் திருவீதி, அதாவது மேல் உத்திருவீதி எழுந்தருளினார்; அதற்குமேல் அப்பால்போனால் மழைத் துளிவிழ ஆரம்பிக்குமென்று அருகிலிருந்த உத்தமநம்பி திருமாளிகையிலேயே தங்கினார். (இந்த ஸங்கர்ப்பத்தை "ஆவ்ருஷ்டிபாத விரதே: மழை ஓயும் வரையில்—என்று லக்ஷ்மீ காவ்யதில் சொல்லியிருககிறது.)

தம்முடைய திருமாளிகையில் பெருமாள் மழைக்குத் தங்க வந்ததால் உத்தமநம்பிகளும் தம்முடைய கொலுச் சாவடியில் இருக்கசெய்து ஸர்வஸ்வத்தையும் ஸமர்ப்பித்து மழை நின்றபிறகு பெருமாளை ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணிவைத்தார். இனி, தூர ப்ரயாணங்களுக்கு வாஹநம் கூடாதென்றும், பல்லக்குதான் உசிதமென்றும் ஏற்பாடு செய்தார் உத்தமநம்பி.

பிறகு ஒருகாலத்தில் உத்தமநம்பி தம்முடைய திருமாளிகையைப் பிரித்து கோயிலுக்குள் நாலு பக்கத்திலும் நாலு நூற்றுக்கால் மண்டபம கட்டிவைத்தார். அக்நிமூலையில் ஸ்ரீபண்டாரம், நைருதியில் கொட்டாரம், வாயுவில் முதலாழ்வார், வாஸுதேவன் ஸந்நிதி; ஈசாந்யத்தில் ராமன் ஸந்நிதி--ஆக இந்த நாலு நூற்றுக்கால் மண்டபங்கள் உத்தமநபியால் கட்டப்பட்டன). உத்தம நம்பியினுடைய இந்த கைங்கரியத்தைப் பெருமாள் பெரிதும் உகந்து "பெருமாள் சாமந்தர், அரங்கர் சாமந்தர்"—என்று அவருக்கு பட்டப்பெயர் கொடுத்தார். அத்யயநோத்ஸவம் மேலப்படி மரியாதை உத்தமநம்பிக்கு நடக்கையில் இந்த அருளப்பாடு வழங்குகிறது.

http://acharya.org

இப்படி பல கைங்கரியங்களும் பண்ணிக்கொண்டு 72 வருஷம் எழுந்தருளியிருந்தார் ராஜாக்கள் பெருமாள் உத்தமநம்பி.

82. திருமலைநாத உத்தமநம்பி:—

இவர் லக்ஷ்மீகாவ்யம் எழுதின கவி- லக்ஷ்மீ காவ்ய விஷயம் தனி அத்யாயமாக கடைசியில் காணலாம்.

திருமலைநாத உத்தம நம்பி ஸ்ரீரங்க ஸ்ரீநிர்வாஹம் பண்ணினார். இவர் பெருமாளுக்கு திருவிடையாட்ட கிராமங்கள் வாங்கவேணுமென்று சாலிவாஹன சகாப்தம் 1372 (கி. பி. 1450)க்கு மேல் ப்ரஜோத்பத்தி வருஷத்தில் முதல் கஜபதிதேவ மஹாராயரைக் காண விஜயநகரம் போய் பலர் கையிலும் தாராதத்தம் வாங்கினது பொன் 50,000. அதற்கு சேர்த்த கிராமங்கள் 106- இவர் காலம்வரையில் சேர்ந்த கிராமங்கள் மொத்தம் 282. அதாவது:—

| | | | |
|---|---|---|---|
| 79-வது உத்தமநம்பி | முதலில் வாங்கினது | | 62 |
| | பிறகு | ,, | 13 |
| 80 ,, | ,, | ,, | 101 |
| 82 ,, | ,, | ,, | 106 |
| | | | 282 |

இந்த எல்லா கிராமங்களுக்கும் உத்தமநம்பிகள் ராயரைக் கொண்டு ஸர்வமாந்யமாகக் கழிப்பித்துக்கொண்டார். (ஸர்வமாந்யமாவது எவ்வித வரிவாய்தாவும் இல்லாத இறையிலி.)

http://acharya.org

இந்த உத்தமநம்பி பண்ணின கைங்கர்யத்தின் விவரம்:-

1. பெருமாள் தேவன் மண்டபத்துக்கு கொடுங்கை வைப்பித்தார். (பெருமாள் தேவன் மண்டபமாவது ஆயிரக் கால் மண்டபம். அதற்கு இவர் வைத்த கொடுங்கையாவது தென்புறம் கொட்டகை போடும் இடத்திலும் மேற்கிலும்.)

2. திருக்கொட்டாரத்துக்கு தென்வடக்கான கீழ்த் திருமதிள் (கொட்டார ப்ரதக்ஷிணத்தில் மேல்புறம் வடகோடிவரை ஓடுகிற சிறு மதிள்) பழகி விழுந்து போகையால் அஸ்திபாரத்தளவும் பறிப்பித்து கல்படை செங்கல் படையும் கட்டுவித்து முதல் கட்டுக்கு (நெல் உலர்த்தும் திறந்த வெளிக்கு) தளவரிசையும் கட்டினார்.

3. பெரிய திருமண்டபத்துக்கு கிழக்கே நூற்றுக் கால் மண்டபம் கட்டிவைத்து அதிலே ஜ்யேஷ்டாபிஷேகத்தில் ஸஹஸ்ரகலசாபிஷேகமும் பண்ணிவைத்தார்.

[பெரிய திருமண்டபம் என்று கருட மண்டபத்துக்கும் உள்ளே அழகியமணவாளன் திருமண்டபத்துக்கும் பெயர். கருட மண்டபத்துக்குக் கிழக்கில் ஸ்ரீபண்டாரமும் அழகிய மணவாளன் திருமண்டபத்துக்குக் கிழக்கில் கிளி மண்டபமும் நூற்றுக்கால் மண்டபங்களாகும். ஸ்ரீபண்டாரம்81-வது உத்தமநம்பிகளாலே கட்டினதாகையால் இவர் அதைப் பூர்த்தி செய்தவராவார்.

(ஜ்யேஷ்டாபிஷேகத்தன்று ஸஹஸ்ரகலசாபிஷேகமும் சேர்ந்ததால் இன்றைக்கும் "ஆயிரக்குடத் திருமஞ்சனம்" என்று பெண்டுகள் தமிழாய் வழங்குகிறார்கள். இப்போது விமாந ப்ரதக்ஷிணத்தில் பரம ஏகாந்தமாய் நூற்றுக்குக் குறைந்த குடங்களால் நடக்கும் ஜேஷ்டாபிஷேகம் முன்பு ஸ்ரீபண்டாரத்தில் பஹிரங்கமாய் ஆயிரம் குடங்களோடு நடந்தது.)

http://acharya.org

4. திருச்சிராப்பள்ளி சாவடிக்கு ராயமுத்ரை மநுஷ்யராக குழித் தண்டல் கம்பயராஜா வருகையில் "இந்த சீமையை விடவேணும்"—என்று திருமலைராஜா சொல்ல, இருவருக்கும் (உத்தம நம்பிக்கும் ராஜாவுக்கும்) விரோத முண்டாகி, சகாப்தம் 1380 (கி. பி. 1458)ல் பிரமாதி வருஷம் புரட்டாசி மாஸத்திலே தென்கரை வடகரை சபையார் (பிரதிநிதிகள்), நாட்டார் (ஜனங்கள்) அனைவரும் குடிகளும் புறப்பட்டு (வெளியேறி), சீமையைப் பாழ்பண்ணி, பன்னிரண்டு வருஷம் ஆயிரக்கால் மண்டபத்திலும் தேசாந்தரத்திலும் குடியிருந்து, பின்பு சகாப்தம் 1392 (கி. பி. 1470)ல் கர வருஷத்தில் திருச்சிராப்பள்ளி சீமை திருமலை ராஜாவின் சீமையாகையில், தென்கரையாரும் வடகரையாரனைவரும் திருமலைராஜாவைக் கண்டு தங்கள் தங்கள் கிராமத்திலே போனபின்பு, இந்த மண்டபத்துக்கு (ஆயிரக்கால் மண்டபத்துக்கு) மேல்புறத்து ஒழுங்கு மண்டபக் கொறடு (இப்போதுள்ள தோட்டம்) தூர்ந்துபோகையில் அந்த மண்ணும் எடுப்பித்து, கோபுரத்துக்கு ("வெள்ளை கோபுரத்துக்கு") வடபுறம் சாரமுற்றும் (சாரம் வரையில் அல்லது சாரமாயிருந்த மண் மேடு) மண்ணுமெடுப்பித்து புறம்பே போடுவித்து சாந்தி ஹோமம் பண்ணி வைத்தார்.

5. ஸங்க்ரம (ஸங்க்ராந்தி)த் திருநாளுக்கும்[1] சித்திரைத் திருநாளில் எட்டாம் திருநாள் எல்லைக்கும்,

1. மூன்று பிரம்மோத்ஸவங்களிலும் 8-ம் திருநாட்கள் எல்லைத்திருநாட்கள். இப்போது சித்திரை 8-ம் திருநாள் ரங்க விலாஸத்தில் நடக்கிறது. ஸங்க்ராந்தி மட்டும் இவ்விடத்திலேயே தெற்குப் பார்க்க நடக்கிறது.



http://acharya.org

மேல்புறத்தில் ஒழுங்கை மேல்படி வழியாக [2]யானைபூண்ட புறம்பில் கொறட்டிலே மேற்குப் பார்க்க பெருமாளை ஏறியருளப் பண்ணிவைத்தார்.

6. இதுக்கு மேல்புறத்தில் சாமந்தனர் தோப்பிலே (தேசிகன் ஸந்நிதிக்குப் பின்புறமுள்ள கீரைத் தோட்டத்திலே) திருக்காவணமும் ("கர்த்தர் மண்டபம்") இடுவித்து சிறப்புக் கட்டளையும் நடத்தினர்.

7. புந்நாக தீர்த்தக்கரை லக்ஷ்மீ நாராயணப்பெருமாள் கோயிலையும் ஜீர்ணோத்தாரணம் பண்ணினர். இவர் லக்ஷ்மீகாவ்யம் அருளிச்செய்து 37 வருஷம் எழுந்தருளியிருந்தார். (லக்ஷ்மீகாவ்யத்தின் விவரம் கடைசியில்.) புந்நாக தீர்த்தம்—மேலூர் வ்ருக்ஷி மண்டபம்.

83. குடல் சார வாளா நாயனர் என்கிற சின்ன க்ருஷ்ண ராய உத்தம நம்பி—

1. இவர் ஸ்ரீரங்க ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கும்போது கர்ணாடக நாயகர்கள் மதுரையிலே துரைத்தனம் பண்ணினர்கள். கிருஷ்ணப்ப நாயகர் அதிகாரத்தில் சகாப்தம் 1456 (கி. பி. 1534)க்கு மேல் ஜய வருஷத்தில் க்ஷாமம் வந்து நெல் கிடைக்காமல் போயிற்று. 282 கிராமங்களிலிருந்து நெல் வருமானமுள்ள, கோயில் திருக்கொட்டாரத்தில் கட்டுக் கட்டியிருக்கிற நெல்லைக் கொடுக்க வேணுமென்று உத்தம நம்பியைக் கேட்டார் நாயகர். உத்தம நம்பி ஆக்ஷேபித்து "அரங்கன் சொத்துக்கு ஆசைப்படக்

---

2, யானைபூண்ட புறம்பு—மேற்கில் நாச்சியார் ஸந்நிதியிலிருந்து பிரவேசிக்கையில் இருபுறத்திலும் யானைகளுள்ள முன் மண்டபம். இப்போது யானையை மூழ்த்து மத்தனை மண்மேட்டில் யானை மறைந்திருக்கிறது.

http://acharya.org

கூடாது'' என்று ஹிதமாய்ச் சொல்லியும் நாயகர் பலவந்தம் பண்ணினார். "நீர் கூடைபிடித்தால் நானே மரக்கால் பிடித்து அளக்கிறேன்".—என்று சொல்லி ராஜாவை கூடை பிடிக்கச் செய்தார் உத்தம நம்பி. முதல் மரக்காலுக்கு "திருவரங்கம்'' என்று அளந்து, மறு மரக்காலுக்குப் "பெரியகோயில்'' என்று சொல்லி தம்குடலை அளந்து ப்ராணத்யாகம் பண்ணினார். ராஜாவும் வெளியே வந்து இவருக்கு "குடல் சார வாளா நாயனார்'' என்று பட்டப் பேர் கொடுத்தார்.

அது முதல் கொட்டாரத்துக்கு வந்த நெல் பெருமாள் தளிகைக் கன்னியில் வேறே காரியங்களுக்கு கொடுக்கக்கூடாதென்று நிஷ்கர்ஷையாயிற்று. மேலே சொன்ன 282 திருவிடையாட்டக் கிராமங்களில் அளவு முதலான கணக்குகளில் ஒன்று இரண்டு மூன்று என்ற சொல்லுக்கு பதிலாக திருவரங்கம், பெரியகோயில், மூன்று என்றே சொல்வது வழக்கம். இன்றைக்கும் இதுவே முறை.

2. இந்த உத்தமநம்பி[1] சகாப்தம் 1456-ல் ப்ராணத்யாகம் செய்யு முன்னரே சகாப்தம் 1409-ல் (கி. பி. 1487) ப்லவங்க வருஷத்தில் எறமாஞ்சி திம்மப்ப நாயகர் முதலானோர் கையிலே 20 கிராமங்கள் திருவிடையாட்டமாக தாரை வாங்கி, திருக்கொட்டாரம் முகப்புத் திருமண்டபம் (இப்போது கணக்கு எழுத்து முதலியவை நடக்கும் இடம்) கட்டினார்.

3. நலந்திகழ் நாராயண ஜீயர் (கூரநாராயண ஜீயர்) பிரதிஷ்டையான செங்கமல நாயகியார் (தாங்பலக்ஷ்மியாக) எழுந்தருளியிருக்கிற திருமதிளும் பழகிச் சரிவாகையில்

1. கோயிலொழுகு 124-ம் பக்கம்

http://acharya.org

அதைக் கட்டி வைத்தார். (பலரும் வரக்கூடிய இடமாகையால் திருவாராதனக்காரர் தவிர இதரர்கள் அணுக வொண்ணாதபடி படிக்கட்டு ஏறிப்போக வேண்டிய உயரத்தில் இவள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள்).

4. இரண்டாம் நெல்லுக் கூடம்[1] பெருச்சாளி அறுத்து சரிந்து போனதால் உள்ளுக்கு தளவரிசை போட்டு கல் தூணும் நிறுத்தி உறுதியாகக் கட்டி வைத்தார்.

5. சகாப்தம் 1413 (கி. பி. 1491)ல் விரோதிக்ருது வருஷத்தில் ஸ்ரீபண்டாரத்துக்கு சில கிராமங்கள் விலைக்கு வாங்கினார்.

6. ராஜமஹேந்திரன் திருவாசல் ("நாழிகேட்டான் வாசல்") நிலைகால் முகவணையுள்பட துலுக்காவணத்திலே இடிந்து விழுந்து சேதமாகையால், இந்தத் திருவாசலை அடித்தட்டளவும் பிரிப்பித்து, நலமாக நிலைகால் முகவணை உள்பட்டதும் பிராட்டிமலையிலே வெட்டித் தீர்த்து (?) நல்லடிப்பாரமுள்ளதாகவும் உறுதியாகவும் கட்டுவித்து கொடுங்கையும் வைப்பித்தார்.

இவர் 52 வருஷம் 1 மீ 8-நாள் ஜீவித்திருந்தார்.

84, 85—உத்தம நம்பிகளில் விசேஷமில்லை.

---

86. ஸ்ரீநிவாஸாசார்ய உத்தம நம்பி—

இவர் ஸ்ரீரங்கஸ்ரீ நிர்வாஹம் பண்ணும்போது அங்ய ஸம்ஸ்தானத்திலிருந்த கோயில் கிராமங்களை யெல்லாம் துரைகளும் பாளையக்காரர்களும் கட்டிக்கொண்டார்கள். நாயகர் ஸம்ஸ்தானத்திலுள்ள 96 கிராமங்கள் மட்டும் பெரு

1. —கோயிலொழுகு 124-ம் பக்கம்

5, 6 —இரண்டும் கோயிலொழுகு 125-ம் பக்கம்.

http://acharya.org

மானுடையவைகளாய் நின்றன. திருச்சியில் கி. பி. 1662 முதல் 1692 வரை ஆண்ட நாயகர்களில் ஏழாமவரான கர்ணாடக சொக்கநாத நாயகர் இந்த 96 கிராமங்களையும் ஒப்பந்தப்படி ஸர்வமான்யமாக அநுபவித்து பெருமாளுக்கு ஸம்வத்ஸரோத்ஸவங்கள் எல்லாவற்றையும் நடத்தி தம்மை ஆசீர்வதித்து வரும்படி நிஷ்கர்ஷை பண்ணிவைத்தார். அது ஒரு தாம்பிரப்பட்டயமாய் தெலுங்கில் எழுதப் பட்டிருக்கிறது.

## சொக்கநாத நாயகர் தாம்பிரப் பட்டயம்

(தெலுங்கிலுள்ளதற்கு சரியான தமிழ்)

ஸ்ரீராம

ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாஹந சகாப்தம் 1595 (கி. பி. 1673) ப்ரமாதீச நாம ஸம்வத்ஸரம், வைசாக சுத்த பஞ்சமி—

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டா பநார்யரான ஸ்ரீரங்கம் உத்தம நம்பிள்ளை ஸ்ரீநிவாஸாசார்யர் அவர்களின் திவ்ய பாதபத்மங்களில் கர்ணாடநாயகரான சொக்கநாத நாயகர் விண்ணப்பம் செய்து கொடுத்த ஸர்வமாந்ய சாஸந க்ரமம்:—

ஸ்வயம் வ்யக்தரான ஸ்ரீரங்கநாதருக்கு தங்கள் முன்னோர்கள் ரத்ந ஸிம்ஹாஸநாதிபதிகளான ராயர் அவர்கள் சமுகத்தில் ஸம்பாதித்து, அதை ஸர்வமாந்யமாக அநுபவித்துக்கொண்டு ஸந்நிதி காரியங்களை நடத்திக்கொண்டு வந்ததால், இப்போது அந்த ஸம்ஸ்தாநத்தில் நடந்துவந்த சில கிராமங்களையும், நம்முடைய ஸமஸ்தாநத்தில் நடந்து வந்த சில கிராமங்களையும் பாளையக்காரர்களும் துரைகளும்

http://acharya.org

கட்டிக்கொண்டுவிட்டதால், இப்போது நம்முடைய ஸம்ஸ்தாநத்தில் மிஞ்சின கிராமங்களை எண்ணிக்கொள்ளுங்கள் :-

## கிராமங்களின் விவரம்

திருச்சிராப்பள்ளி உஜரு சாவடி ராஜ கம்பீர வளநாடு மைலம்—

1. அத்தாணி 43
2. வெள்வாயக்குடி 46
3- செப்பாலக்குடி 12
4. எ(ஒ)ரையூர் 84
5. கொத்தமங்கலம் 49
6. கண்ணநல்லூர் (1)
7. வாய்த்தலை கூடலூர் 50
8. செட்டிமங்கலம் 52
9. நெய்வேலி 53
10. சிணைப்போகநல்லூர் 33
11. தொடையூர் 34
12. கோவத்தகுடி 35
13. மேப்பத்து 31
14. கடுக்காய்த்துறை 36
15. பாச்சூர் 37
16. வீராந்தநல்லூர் 38
17. அழகியமணவாளம் 39
18. சிதேவிமங்கலம் 47
19. பாளையநல்லூர் 41
20. மாவடிமங்கலம் 44
21. காட்டூர் 56
22. தண்டாங்கோரை 57
23. பெருவிளாச்சேரி 58
24. மருதூர் 59
25. சுண்டைக்காய் 1
26. மேலப் பாண்டியபுரம் 32
27. உலகம் கண்ட பெருமாநல்லூர் 24
28. புதுக்குடி 60
29. மஞ்சள்திடல் 61
30. விராலக்குடி 13
31. அகளங்கநல்லூர் 62
32. காரைக்குடி 14
33. களிகாடாக்குடி 15
34. கமலதானம் 16
35. சங்கேந்தி 63
36. பெரும்பூர் 17
37. ஊத்தூர் 18
38. வண்டக்குடி 19
39. பனைமங்கலம் 45
40. அன்பில் 64
41. தத்தமங்கலம் 65
42. வளவநல்லூர் 66
43. காங்கயம்பேட்டை 20
44. கிளியநல்லூர் 54
45. செங்குடி 40
46. மணச்சநல்லூர் 42
47. பழம்புளிவட்டம் 55

http://acharya.org

48. சோழங்கநல்லூர் 67
49. தாழக்குடி 48
50. கோவிந்தாக்குரிச்சி 68
51. வேங்கை மண்டலம் 2
52. தென்கட்டு பாண்டியா குலாசநி வளநாடு, (2)
53. விஷ்ணு வராதீத வளநாடு3
54. உத்தமசேரி 69
55. நக(ர்)ரம் 70
56. உத்தராச நல்லூர் 71
57. கிளிக்கூடு 72
58. திருவளக்கொச்சி 73
59. வெளித்திருமுத்தம் 74
60. அழகியமணவாள சதுர் வேதி மங்கலம் என்கிற மேலேயூர் (4)
61. சிறுகமணி 28
62. சோளகுணத்தமாவு என்கிற பெருகமணி 26
63. வாங்கல் 3
64. நெரூர் 4
65. பெனப்பொடி 5
66. கட்டளை 6
67. மணவாசி 7
68. கொடியாலம் 29
69. அல்லூர் 75
70. காட்டுமங்கலம் 21
71. கூடலூர் 76
72. சேங்குடி 51
73. பாட்டுமங்கலம் 22
74. (திரு)நல்லூர் 77
75. திருவரங்கநல்லூர் 78
76. சிந்தாமணி 79
77. செம்பட்டு 80
78. சிறுமயங்குடி 81
79. கருப்பூர் 25
80. ர(ந)ங்கபுரம் 8
81. துலவங்கிபுரம் 9
82 குரிச்சி 82
83. முத்தரசநல்லூர் 83
84. அணலை 27
85. உறையூர் 23
86. முறுங்கப்பேட்டை 85
87. குழுமணி ஸமுத்ரம் 30
88. பழூர் 86
89. சர்க்கார்பாளையம் 87
90. புத்தூர் 88
91. க (வ) யலூர் 10
92. மணத்தட்டை 11
93. ஆலம்பாடி 89
94. திருத்தான்தோனி 90
95. தாமலவாடி 91

இந்த தொண்ணூற்றூறு ? கிராமங்களையும் அதிலுள்ள க்ஷேத்திரங்களையும் தாங்களே ஸர்வமான்யமாக அநுபவித்துக்கொண்டு, ஸ்ரீரங்கநாதருக்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவம் முத

http://acharya.org

லான ஸகல ஸந்நிதி கைங்கரியங்களையும் வைபவமாக நடத்திக்கொண்டு, புத்ர பௌத்ர பாரம்பர்யமாய் தாங்களே ஸர்வமாந்யமாக அநுபவித்துக்கொண்டு ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் நமக்கு ஆசீர்வாதம் பண்ணிக்கொண்டு ஸுகமாக இருக்கவேண்டியது.

ஸ்ரீ சோக்கநாதய்யா

---

[மேலே 96 'தொம்பதியாறு' என்று எழுதியிருக்கும் 95தான் இருக்கிறது. மஹஜர் கணக்குப்படி 91 கிராமங்களே. அந்த எண்ணிக்கையையும் அந்தந்த கிராமத்தில் காணலாம். இப்போது சர்க்காரிலிருந்து கொடுக்கும் 35,000/- ரூபாய்க்கு விவரம் இந்த கிராமங்கள் அல்ல.

கி. பி. 1673-ல் ஏற்பட்ட இந்த கிராமங்களிலிருந்து கோயிலுக்கு வந்த தொகை எவ்வளவோ தெரியாது. இதற்குப் பிறகு ஒரு காலத்தில் 57 கிராமங்களிலிருந்து ரூ. 82,015-3-11 3/4 வந்ததாக ஒரு கணக்கு உண்டு. இங்கிலீஷ் ராஜ்யம் ஏற்பட்டவுடன் 25-11-1878-ல் உண்டான டி. பி. 3136. G. O. 1625-ன்படி 55 கிராமத்திலிருந்து, இன்னதிலிருந்து இவ்வளவு என்ற விவரத்துடன் மொத்தம 35,000 ரூ. கணக்கிட்டு இன்றைக்கும் வருஷா வருஷம் கொடுக்கப்படுகிறது. இந்தக் கணக்கில் மொத்தம் 119 கிராமங்களை 55 கிராமமாகப் பிணைத்திருக்கிறது. 82,000/- ரூபாயை சர்க்காரில் வசூலித்துக் கொண்டு 35,000 ரூ. கொடுக்கிறார்கள்.

1878-ம் வருஷத்துக்கு முன்பு இங்கிலீஷ் ராஜ்யத்திலேயே 40,000/- ரூ கொடுத்து வந்ததை, தேவையானபோது மொத்தமாய் கொடுப்பதாகச் சொல்லி, வருஷத்

http://acharya.org

துக்கு 5000/- ரூ. நிறுத்திக்கொண்டதாக ஒரு உடன் படிக்கை ஏற்பட்டது. அதன்படி கூடுதலாகும் தொகையைக் கொடுக்குமாறு 1922-ல் சர்க்காருக்கு பெரிய மகஜர் அனுப்பினதில், அவர்கள் கக்ஷியை ஒப்புக்கொண்டு, தேவஸ்தானத்துக்கு பாக்கியுள்ளதாக தங்களிடம் கணக்கு வைக்கவில்லை யென்ற காரணத்தால் மறுத்து விட்டார்கள். தாவா போட்டு வசூலிக்கலாமாகையால் தாவா செலவுக்குப் பொருள் கொடுப்பதாக, ராஜா ராமநாதன் செட்டியார் ஒப்புக் கொண்டும், தாவா போடுவாரில்லாமலே காலம் போகிறது; பாக்கியும் ஏறுகிறது ]

87. விசேஷமில்லை.

---

**88 ஸ்ரீரங்காசார்ய உத்தம நம்பி—**

இவர் ஸ்ரீரங்க ஸ்ரீகார்யம் நிர்வாஹம் பண்ணுகிற காலத்தில் ராஜ்யம் மஹாராஷ்டிரர்களுக்கு ஸ்வாதீனமாயிற்று. அவர்களுக்கு ப்ரதிநிதியாக திருச்சிராப்பள்ளியில் மொராரி ராவ் நீதி செலுத்தி வந்தார். 96 கிராமங்களில் 80 கிராமங்களை மட்டும் கோயிலுக்கு வைத்து 16 கிராமங்களை எடுத்துக்கொண்டது மன்னியில், இந்த 80 கிராமத்திலுங்கூட ஸ்ரீரங்கம் கோயிலுக்கு, 57, ஜம்புகேசுவரத்துக்கு 14, தாயுமான ஸ்வாமி கோயிலுக்கு 9 என்று பங்கிட்டு, அவற்றை உத்தமநம்பி ஸ்ரீரங்காசார்யரே ஜாகீராய் அநுபவித்துக்கொண்டு மூன்று கோயில் காரியங்களையும் ஆராய்ந்து வரும்படி ஏற்பாடு செய்தார் மொராரிராவ். இதன்படியே நடந்து வருகையில், ஆற்காடு நவாப் அன்வாருதீன் திருச்சிராப்பள்ளிக்கு அதிகாரியாய் வந்து அதிகாரம் செலுத்தினர். கி. பி. 1743-க்குமேல் திருச்சிராப்பள்ளி நவாப் ஷீராஸ்வதீன் தேவுல்லா

http://acharya.org

மஹம்மதலி கான் பஹதூரின் வசமாயிற்று. அவர் ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாஹங்களை கவனிக்கையில் இந்த 80 கிராமங்களையும் சுரோத்ரியமாக புத்ர பௌத்ர பாரம் பர்யமாய் அநுபவித்து மூன்று கோயில் காரியங்களை யும் நிர்வஹித்துக்கொண்டு வருஷத்துக்கு ரூ. 60,000/- கொடுத்துவரும்படியாக ஏற்பாடு செய்தார். அப்படியும் சில காலம் நடந்தது.

---

89. ஸ்ரீநிவாஸாசார்ய உத்தம நம்பி—

இவர் 38-வது ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பியின் குமாரர். தகப்பனாருக்குப் பிறகு இவர் நிர்வாஹத்துக்கு வரும்போது அதி பால்யமாயிருந்தார். அப்போது அமீர் முரும் பஹதூர் நவாப். மூன்று கோயில் கிராம காரியங் களும் சிறு பிள்ளையான இந்த உத்தம நம்பியால் நடக்க வேணுமே என்று பார்த்து, அந்த நவாப் கோயில் கிராமங் களை கோயில் தாலூகா—என்று ஏற்படுத்தி, வருமானங் களை வசூலித்து கோயில்களை நடத்த ஒரு அமுல்தாரனை யும் நியமித்தார். அப்போது இந்த உத்தம நம்பிக்கு வயஸு 18. இவர் அதிகாரம் வஹிக்காமலே இறந்து போனார். இவருக்கு பதிலாக உத்தம நம்பி குடும்பத்துக்கு ஒருவர் ஸ்வீகாரம் வரநேரிட்டது. அவர் 90-வது ஸ்ரீரங்கா சார்ய உத்தமநம்பி. அவர் ஸ்ரீரங்க ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கு முன்னரே தேசம் ஆங்கிலேயர் வசமாகிவிட்டது.

90. ஸ்ரீரங்காசார்ய உத்தம நம்பி—

ஸ்ரீநிவாஸாசார்ய உத்தமநம்பி, 89-வது தலைமுறைக் காரர், பால்யத்திலேயே இறந்ததால் இவர் ஸ்வீகாரம் வந்தார். 88ஆமவரான ஸ்ரீரங்காசார்யருக்குப் பிறகு இந்த

http://acharya.org

தொண்ணூருவது உத்தமநம்பி குடும்பத்தை ஏற்றுக் கொள்ளும்வரையில் குடும்பத்திலுள்ள பெண்டுகளே குடும்ப பரிபாலநம் பண்ணினார்கள். அவர்கள் கோஷா ஸ்திரீகளாகையால், பூமி சொத்து, ஸந்நிதி கைங்கர்யம் மரியாதை—எல்லாம் பிறர் வசமாயின. உத்தமநம்பி திருமாளிகைக்கு தூரதேசத்திலிருந்த சொத்துக்களையெல்லாம் நிர்வாஹம் பண்ணமாட்டாமல் பெண்டுகளே பராதீநப் படுத்தி விட்டார்கள்.

90-வது உத்தம நம்பி நிர்வாஹத்துக்கு வந்தபோது அவருடைய தாயாதியான சக்ர ராய ஸ்ரீரங்க ராஜருக்கும் அவருக்கும் ஸந்நிதி கைங்கர்யம், மரியாதை முதலியவைகளைப் பற்றி விவாதம் உண்டாகி நியாய ஸ்தலம் போக நேரிட்டது. அவரவர் வசத்திலிருந்த காணி பூமிகளையும் கோயில் மிராசுகளையும் அவரவர்களே கிரயசாஸநம் பண்ணவும் போக்யம் வைக்கவும் நேரிட்டது. இது தவிர கி. பி. 1830-க்குமேல் உத்தம நம்பி திருமாளிகையில் அக்நி பாதை உண்டாகி, புஸ்தக பாண்டாகாரத்தில் தீப்பற்றி, அநேகம் கிரந்தங்களும், சொத்துக்களைப் பற்றின ஆதாரங்களும் எரிந்துபோயின. அதனாலும் பல காணி பூமி ஸந்நிதி மிராசுகளை இந்த உத்தமநம்பி இழந்துவிட்டார். இவ்விதமாக குடும்பம் சோர்வடைந்தது.

கி. பி. 1842 வரை கோயில் சர்க்கார் நிர்வாஹத்திலேயே இருந்தது. அதற்குமேல் தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தி அவர்களிடம் கோயிலை ஒப்பிக்கும்போது இந்த 90-வது உத்தமநம்பி ஒரு பரம்பரை தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டார். இவர் 1859ல் இறந்து போனார்.

http://acharya.org

## உத்தம நம்பி சிங்கு அய்யங்கார்

90-வது ஸ்ரீரங்காசார்ய உத்தமநம்பிக்கு ஐந்து குமாரர்கள். அவர்களில் ஜ்யேஷ்டரான சிங்கு அய்யங்கார் ஸுந்தர புருஷராய், வித்வானாய், வாசாலராய், ஆங்கிலம் வல்லருமாயிருந்தார்; ஒரு ஸமயம் கலெக்டரிடம் போய் சாதுர்யமாகப் பேசி வந்தவர் த்ருஷ்டி தோஷத்தினால் இறந்துபோனார். இவருடைய ஸந்ததி விருத்தியாகவில்லை. இவருடைய தம்பிகள்—உத்தமநம்பி நரஸிம்ஹாசாரியர், உத்தமநம்பி ரங்கஸ்வாமி அய்யங்கார்—இந்த இருவருடைய ஸந்ததியார்களே இப்போது உள்ளவர்கள்.

91. உத்தம நம்பி நரஸிம்ஹாசார்யர்

தகப்பனாருக்கும் தமையனாருக்கும் பிறகு, இவரே ஜ்யேஷ்டராகையால், தர்மகர்த்தாவாக வந்து ஸ்ரீரங்கஸ்ரீ கார்யம் நிர்வஹித்தார். இவர் 1872ல் காலகதி அடைந்தார். வயஸு 81.

92. உத்தமநம்பி ஸ்ரீரங்காசார்யர், வயஸு 67—0—0

93. உத்தமநம்பி தாதாசார்யர் ,, 61—0—0

---

## உத்தமநம்பி சடகோபாச்சாரியார்

இவர் 1898, விளம்பி கார்த்திகை பூரத்தில் ஜநித்தார். இவருடைய ஜநக தகப்பனார் 92-வது உத்தம நம்பியினுடைய தம்பியான உத்தம நம்பி சிங்கமய்யங்கார். தன்னுடைய தமக்கைக்கு ஸ்வீகாரம் போன இந்த சிங்கமய்யங்கார் தம் தமையனாரான 92-வது உத்தம நம்பியின் குமாரர் தொண்ணூற்று மூன்றாவதான தாதாசார்யர் ஸந்ததியில்லாமல் போனதால், தன்னுடைய கநிஷ்ட்ட

http://acharya.org

குமாரரான 94-வது சடகோபாசார்யரை 1903-ல் ஸ்வீகாரம் கொடுத்தார்.

இந்த 94-வது உத்தமநம்பி தென்னிந்தியா ரயில்வே உத்யோகத்தி லிருக்கிறார். இவர் 1924 முதல் தேவஸ்தானத்தில் தர்மகர்த்தாவா யிருக்கிறார். இவர் ரொடேஷன் டிரஸ்டியாகையால் 1924 முதல் நாளது வரையில் ஆறு முறை தர்மகர்தாவாக இருந்திருக்கிறார்; 1948–49லும் அதிகாரம் வஹித்தார்.

1927-28ல் இவர் இரண்டாவது முறை அதிகாரம் வஹித்தபோது தேவஸ்தானத்தின் பொருள் நிலை மிகவும் சிரமமாயிருந்தது. ஸ்ரீமாந். ஸர். டி. தேசிகாசார்யர் லாடரி ஆரம்பித்து மூன்று லக்ஷம் ரூபாய் சேகரம் பண்ணி வருஷத்துக்கு மூவாயிரக் கலம் நெல் விளையக்கூடிய நூறு காணி நிலம் வாங்கி விஸ்தாரமான மராமத்துகளும் நடத்தினார். அந்த லாடரிகளை நிர்வஹிக்கும் பொறுப்பு முழுவதையும் வஹித்த சிலரில் இந்த சடகோபாசார்யர் ஒருவர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கோயில் நிர்வாஹத்தில் ஸம்பந்தமுள்ள ஸந்ததியாகையாலும், இப்போது தானும் ஒரு தர்மகர்த்தா வாகையாலும், இங்கிலீஷ் படிப்பு லௌகிக உத்தியோகம் முதலிய ஸௌகர்யங்களாலும், கோயிலுக்கு அருகாமையில் கோயில் பார்வையிலேயே உள்ள திருமாளிகையில் வாஸத்தாலும் இவர் கோயிலிலுள்ள ஸகல விதமான லௌகிக வைதிக வியவஹாரங்களை நன்றாய் அறிவார். இந்த உத்தம நம்பி வைபவத்தின் முதல் பதிப்பான உத்தம நம்பி வம்சப் பிரபாவம் எழுதின நரஸிம்ஹாசார்யர் இந்த உத்தம நம்பி சடகோபாசார்யரின் ஜநகதமையனாரே

http://acharya.org

இந்த நரஸிம்ஹாசார்யர் ரிஜிஸ்டிரேஷன் இலாகாவில் உத்தியோகம் வஹித்து ரிடயராகி திருநாடு சேர்ந்தார். இவர் நுட்பமான ஆராய்ச்சிக்காரர். ஸ்ரீரங்கம் கோயில் சரித்திரம் முழுதும் நன்றாக அறிந்தவர். 1940ல் தேவஸ்தானம் அதிகாரிகளின் கோரிக்கைப்படி ஸ்ரீரங்கம் கோயில் சரித்திரம் எழுதிக் கொடுத்தார். அது தேவஸ்தானத்தரால் வெளியிடப்பட்டது. ஸ்ரீரங்கம் கோயில் அமைப்பையும் உத்ஸவங்களையும் பற்றி ஒரு நூல் எழுதி வைத்து நெடுநாளாகியும் அதை வெளியிடாமலே காலம் சென்றார். அதை வெளியிடுவதற்குப் பூர்வாங்கமாகவே இந்த முதல் நூல், உத்தம நம்பி வைபவம் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளியிடலாயிற்று.

---

## நாலாவது அத்தியாயம்

### உத்தம நம்பி கைங்கர்யங்களும் மரியாதைகளும்

I. கைங்கர்யங்கள் :—

(1) பெருமாள் நாச்சியார் அமுது செய்யும் ப்ரஸாதங்களை "ஸ்வாது ஸ்வீகாரம்" பண்ணி பக்வம் சொல்லுவது.

(2) பெருமாளுக்கு ப்ரதிதிநம் ராத்ரி குடிநீர்ப் பால் அமுது செய்விப்பது.

(3) கருவுகலம் முதலான ஸகல சொத்துக்களுக்கும் தம்முடைய கருட முத்ரையை இலச்சினையாக வைப்பது.

(4) வேதவிண்ணப்பத்துக்கு ருக்வேதம் ஸேவிப்பது.

(5) திருக்கார்த்திகைக்கு தீபம் எடுப்பது.

(6) பெருமாள் நாச்சியார்களை புறப்பாடுகளுக்கு ஏகாந்தத்தில் கூட இருந்து எழுந்தருளப்பண்ணி வைத்து,

http://acharya.org

திருமேனிக்குப் பாங்காக திருவாபரணங்களும் சாத்தி வைப்பது.

[பெருமாள் நாச்சியார் முதலான மூர்த்திகளை இடம் விட்டு இடம் எழுந்தருளப்பண்ணுவதும், அவர்களுக்கு சாத்துப்படி (அலங்காரம்) ஸமர்ப்பிப்பதும், அந்தரங்க கைங்கர்ய பரர்கள் தவிர இதரர்கள் பார்க்கக்கூடாத பரம ஏகாந்தமான ஸந்தர்ப்பங்கள். திவ்யமங்கள விக்ரஹத்தி லுண்டான கௌரவத்தாலும், பக்தியாலும், பரிவினாலும் இந்த நியமம் ஏற்பட்டது. ஸ்ரீரங்கத்தைவிட மற்றைய ஸந்நிதிகளில் இந்த நியமம் சரியாக பரிபாலிக்கப்படவில்லை. இதற்கு வேண்டின கைங்கர்ய பரர்களும் அங்கில்லை. பெருமாளுடைய திருமேனிக்கு ரக்ஷகமாக மூன்று அர்ச்சகர்கள் சேர்ந்து, உத்தமநம்பிகளும் அவருடைய மநுஷ்யரும் வந்து "எச்சரிக்கை எச்சரிக்கை" (ஜாக்ரதை) என்று சொல்லி பந்தம் பிடித்து வழிகாட்ட, பெருமாளை இடம் விட்டு இடம் எழுந்தருளப்பண்ண வேண்டியதென்ற கண்டிப்பான நியமம் ஆதிகாலம் முதல் ஏற்பட்டுள்ளது. அதை அநுஸரித்தே இப்போது அதிகாரிகளால் உத்தரவு தண்டனை முதலானவைகளும் உண்டாகின்றன.]

II. மரியாதைகள் :—

(1) பெருமாள் நாச்சியார் அமுது செய்யும் ஒவ்வொரு ப்ரஸாதமும் உத்தம நம்பிகளுக்கு மரியாதையாக தட்டுகளில் வைத்து காட்டப்படும். அதை அவர் ஸேவித்து, கொஞ்சம் ஸ்வீகரித்துப் பார்த்து பக்வம் சொல்லுவார். இதற்காக அவருக்கு ஒவ்வொரு நிவேதநத்திலும் தீர்த்தம், சந்தநம், பரிவட்டம், தாம்பூலம் முதலியவற்றுடன் ஸேவையும் யஜமாந பாத்யமாக ப்ரஸாதமும்

http://acharya.org

ஏற்பட்டிருக்கிறது. ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதியிலும் உறையூரிலும் இந்த பாத்யம் உண்டு.

(2) உத்தம நம்பி அய்யங்காரும் அவருடைய மநுஷயரும் வந்த பிறகுதான் பெருமாள் நாச்சியார் களுடைய புறப்பாடு ஆஸ்தாநம் முதலிய ஏகாந்தங்கள் நடக்கும். உத்தம நம்பி அய்யங்காருடைய மநுஷ்யராவது வரவேண்டும். அவர் இல்லாமல் கார்யம் ஆரம்பமாகாது. கோயிலுக்கு ப்ராசீநமாக ஏற்பட்ட யஜமாநர்களான "ஸ்தலத்தார்களில்" உத்தம நம்பி அய்யங்கார் தவிர மற்ற வர்கள் ஏகாந்தத்தில் இருக்கக்கூடாது. ஏகாந்தத்தில் இருக்க வேண்டியவரும் மரியாதை பெற வேண்டியவரும் உத்தமநம்பி அய்யங்கார் ஒருவரே. பெருமாள் நாச்சியார் கள் புறப்பட்டு ஆஸ்தாநம் எழுந்தருளி, திருவடி விளக் கினதும் உத்தம நம்பி அய்யங்காருக்கு தீர்த்தம், சந்தநம், பரிவிட்டம், ஸ்ரீசடகோபம் முதலியவைகளோடு ஸேவை உண்டு. கண்ணன் உள்பட ஒவ்வொருவருடைய உத்ஸ வங்களிலும் கடைசியில் அவர்களுடைய வெள்ளைமாலையைக் களைந்து உத்தம நம்பிகளுக்கு ஸாதிக்க வேண்டியது. கழுத்தில் ஸாதித்த அந்த மாலையோடு ஸ்ரீசடகோபம் ஆனதும் அவர் மாலையைத் தலையில் பரிவட்டமாக கட்டிக் கொண்டு திருமாளிகை போவார். பெருமாள் நாச்சியார்கள் திருமஞ்சன காலங்களில் ஏகாந்தத்தில் களைந்த வெள்ளை மாலை உத்தம நம்பிகளுக்கு பஹிரங்சமாக ஸாதிக்கப்படும். உத்தம நம்பிகள் வாராதபோனாலும் அவருடைய மநுஷ் யரிடம் அது கொடுக்கப்படும்.

(3) உத்தம நம்பி அய்யங்கார் பெருமாளை ஸேவிக்க வரும் போதெல்லாம் தீர்த்தம், சந்தநம், பரிவட்டம், மாலை

http://acharya.org

வீளயம் (தாம்பூலம்), அபயஹஸ்தம், படி (சந்தனம்), ஸ்ரீசடகோபம் எல்லாவற்றுடன் அவருக்கு ஸேவை பண்ணிவைக்க வேண்டியது.

(4) சேனைமுதலியார் ஸந்நிதியில் அவருக்கு தீர்த்தம் சடகோபமும், தளிகையில் ஸ்வாது ஸ்வீகாரமும் உண்டு.

(5) பெருமாள் எழுந்தருளும்போது வழியில் ஸேவிக்க வரும் உத்தம நம்பிக்கு அறுதியாக இரண்டு படி ஸாதிக்க வேண்டியது.

(6) பெருமாள் நாச்சியார்களுக்கு வழிமண்டபத்தில் திருவடிவிளக்கி உபசாரம் நடந்து தீர்த்த கோஷ்டியாகும் போதெல்லாம் கோஷ்டிக்கு வட்டில் எடுக்குமுன் முதலில் உத்தம நமபிக்கு தீர்த்தம் ஸாதிக்கப்படும்.

(7) அத்யயந உத்ஸவம் இராப்பத்தில் மேலப்படியில் "உத்தம நம்பிள்ளை, பிள்ளை ஐயன், சக்ர ராயர், பெருமாள் சாமந்தர், அரங்கர் சாமந்தர்" என்று அருளப்பாடு ஸாதித்து தொங்கு பட்டுப் பரிவட்டம் ஸாதிக்கப்படும்.

(8) யானை வாஹநத்தன்று அவருக்கு புஷ்பாங்குசம் (பூமாங்குத்தி) ஸாதிக்கப்படும். இது 79-வது உத்தமநம்பி காலத்தில் ஏற்பட்டது. விவரம் அங்கே கண்டு கொள்வது.

(9) பெருமாள் நாச்சியார்களுடைய ஒவ்வொரு உத்ஸவத்தின் முடிவிலும் திருத்தாழ்வரை தாஸர் சொல்லும் திருப்பணிப்புமாலையென்னும் "படிப்பில்" உத்தமநம்பி அய்யங்காருக்கு பாசுரம் சொல்லப்படும். அந்தப் பாசுரம் 79-வது உத்தம நம்பியில் உள்ளது.

(10) மாசி சுக்ல துவாதசி மணவாள மாமுனிகள் தீர்த்தத்தினன்று ராத்ரி உத்தம நம்பி திருமாளிகைக்கு

http://acharya.org

கோயிலிலிருந்து தீர்த்தக் கட்டளை அலங்காரம் வந்து கோஷ்டி நடக்கும்,

(11) நாலு வருஷத்துக் கொருமுறை உத்தமநம்பி அய்யங்கார் ஹைகோர்ட்டு ஸ்கீம் எண்டோமெண்டு போர்டு ஸ்கீம் ப்ரகாரம் தேவஸ்தாநத்தில் தர்மகர்த்தா பதவி வஹிப்பதோடு பரமபத நாதன் ஸந்நிதி பூஜை பரிசாரகமும் பரம்பரை தர்மகர்த்தா பதவியும் வஹிக்கிறார். உறையூர் நாச்சியார் கோயிலில் ஸந்நிதி கருடன், சேனை முதலியார், நம்மாழ்வார் ஸந்நிதிகளும் உத்தமநம்பி அய்யங்காருக்கு சொந்தமானவை. உறையூர் நாச்சியார் ஸந்நிதியிலும் உத்தம நம்பி அய்யங்காருக்கு ஸ்தாநீகம் ஊழியம் முதலான மிராசுகளும் உண்டு. திருக்குடந்தை ஆராவமுதன் ஸந்நிதியிலும் உத்தம நம்பிகளுக்கு பல கைங்கர்யங்கள் உண்டு.

[பரமபதநாதன் ஸந்நிதி :—கோயிலுக்கு ப்ராசீநமாக ஏற்பட்ட யஜமானர்களான ஸ்தலத்தார்களுக்கு அநேகம் சுற்றுக்கோயில்கள் சொந்தமாயுள்ளன. அவற்றில் பரமபத நாதன் ஸந்நிதி உத்தம நம்பியினுடையது. இந்தக் கோயில் சந்திரபுஷ்கரிணிக்கும் கோதண்ட ராமன் ஸந்நிதிக்கும் கிழக்காய், வேதபாடசாலைக்கும் வடக்காய் வடகிழக்கு மூலையிலுள்ளது. இந்தக் கோயிலினுடைய முன் மண்டபமே கால க்ரமத்தில் பாடசாலையாகி தனியாகப் பிரிந்தது. பரமபதநாதன் ஸந்நிதி—பட்டரால் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் மங்களாசாஸனம் பண்ணப்பட்டது. சந்திரபுஷ்கரிணிக் கரையில் திருப்புன்னையடியில் ஆளவந்தார் காலத்திலிருந்து ஆசார்யர்கள் திருவாய்மொழி பாடுவது பட்டராலும் பல வியாக்யாநங்களாலும் ப்ரஸித்தம்.

http://acharya.org

பரமபதநாதனும் ஆழ்வார்களும் திருவாய்மொழி கேட்டுக் களிக்கைக்காக எழுந்தருளியிருக்கும் இந்த ஸந்நிதி பெரியாழ்வார் ஸந்ததியாய் ப்ராசீநபுருஷரான உத்தம நம்பியினுடையதாயிருக்கிறது.]

12. பெருமாள், நாச்சியார், ஆண்டாள்—ஸந்நிதிகளில் உத்தம நம்பிக்கு ஸ்தாநீக பாத்யம் உண்டு.

13. ஸ்ரீஜயந்தி, உறியடி, ஸ்ரீராமநவமி, எல்லேக்கரை, தெப்பம், வஸந்தம்—முதலான உத்ஸவங்களில் அதிகப்படி ஸேவை மரியாதைகளும் உண்டு. பல உத்ஸவங்களில் "விட்டவன் விழுக்காடு"—ப்ரஸாத மரியாதை உண்டு. வஸந்தோத்ஸவம் "விட்டவன் விழுக்காடு"—விவரம் 80-வது உத்தமநம்பியியில்.

14. ரதோத்ஸவங்களில் யாத்ராதாநத்தில் உத்தம நம்பிக்கு பாத்யம் உண்டு.

15. ஸ்தலத்தார்களுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் ஏற்பட்ட திருமேனிஸரம் ப்ரஸாதத்தில் ஸ்ரீரங்கநாச்சியார் ப்ரஸாதப் ப்ரதி திநமும் காலேயில் தட்டுக்காரன் மூலம் திருமாளிகையில் கொண்டு வந்து கொடுக்க வேண்டிய மரியாதையும் உத்தம நம்பிக்கு உண்டு.

[கருடன் கோயில்—ஆண்டாள் திருக்கல்யாணத்தில் கருடன் செய்த மஹோபகாரத்தாலும், உத்தம நம்பி ஆண்டாள் ஸந்ததியாகையாலும், உத்தம நம்பிக்கு கருடமுத்ரை ஏற்பட்டதோடு ஸந்நிதி கருடன், பெரிய கருடன்—இரண்டு கோயிலும் உத்தம நம்பியினுடையதாயிற்று. ஆனால், ஒரு காலத்தில் இந்த இரண்டும் பெண் மூலமாக மாப்பிள்ளைக்கு பாத்தியமாய் இப்போது உத்தம நம்பி குடும்பத்திலில்லாமல் அவர் பந்துக்களின் குடும்பத்திலிருக்கிறது.

http://acharya.org

இதனால், உத்தம நம்பி வம்சமென்றும் கருடன் கோயிலார் வம்சமென்றும் இரண்டு கிளையாயிற்று. சின்னசாமி அய்யங்கார் என்கிற ஸ்தானீகம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் சுமார் 50 வருஷமாக இந்த இரண்டு கருடன் கோயில்களையும், பெரிய கோயில் நாச்சியார் கோயில் முதலானவைகளில் தனக்கும் உத்தம நம்பிக்குமுள்ள ஸ்தானீகம் ஊழியம்—முதலான பல கைங்கர்யங்களையும் நிர்வஹித்துக் கொண்டிருக்கிறார்.]

## திருக் கார்த்திகை பிரம்மரதம்

திருக் கார்த்திகையன்று ஸாயங்காலம் மடைப்பள்ளியில் அக்நிப்ரதிஷ்டை ஆனதும், உள்துறை மணியக்காரர் முதலானவர்கள் யானை, குதிரை, எடுபிடி சாமான், மேளதாளம், வாத்தியம், இரட்டைக்காப்பந்தம்—முதலிய விருதுகளுடன் உத்தமநம்பி திருமாளிகைக்குப் போய் அவரை திருவிளக்கேற்றும் கைங்கர்யத்துக்காக ஸந்நிதிக்கு எழுந்தருளும்படி பிரார்த்திப்பார்.

உத்தம நம்பி சத்ர சாமராதி வரிசைகளுடன் பெருமாளுடைய விருதுகளுடன் புறப்பட்டு வந்து கோயிலுக்குள் ஆழ்வார் கருடன் முதலானவர்களை ஸேவித்துக் கொண்டு, துவஜஸ்தம்பத்தடியில் தண்டம் ஸமர்ப்பித்துவிட்டு ஊஞ்சல் மண்டபப் படிக் கட்டில் உட்காருவார். நட்டு முட்டு முதலான மங்கள வாத்தியங்களை ஸித்தப் படுத்திக் கொண்டு மணியக்காரர் உத்தம நம்பியை மடைப்பள்ளிக்கு எழுந்தருளப் பண்ண வேண்டியது. உத்தமநம்பி மடைப்பள்ளி வாசலுக்குப் போய் உள்துறை மணியக்காரர் சேர்க்கும் தீர்த்தத்தில் திருவடி சோதித்துக் கொண்டு உள்ளே போவார். அங்கே ஒன்பது விளக்குகள்

http://acharya.org

எரிந்து கொண்டிருக்கும். (ஒரு வெள்ளி விளக்கு; எட்டு அகல் விளக்கு.) உத்தம நம்பியினுடைய ஸ்தாநாதிபதி தேங்காய் உடைத்து விளக்குகளுக்கு நிவேதநம் பண்ணுவார். பிரதாநமான வெள்ளி விளக்கை உத்தம நம்பி எடுக்க, அதை ஸ்தாநாதிபதி வாங்கிக் கொள்வார். உத்தம நம்பி குடும்பத்தார் நாலு விளக்குகளும், வேத வியாஸ பட்டர் ஸ்தாநாதிபதி, வாதூல ரங்காசார்யர் ஸ்தாநாதிபதி, அமுதனார், அழகிய மணவாளன் ஸபையார்—இந்த நால்வரும் நாலு விளக்குகளுமாக எடுத்துக்கொண்டு கால்பந்தம், கட்டுமுட்டு வாத்யங்களுடன் பிரதக்ஷிணமாக ஸந்நிதிக்குள் போவார்கள்.

உத்தமநம்பி வெள்ளி விளக்கை வாங்கி அர்ச்சகரிடம் கொடுக்க, அவர் அதை பெருமாளுக்கு கண்டருளப்பண்ணி குலசேகரன் படியில் நெல்லின்மேல்வைத்திருக்கும் சேனைக் காலில் வைப்பார். மற்றை விளக்குகள் ஊழியக்காரர்மூலம் அர்ச்சகரிடம் கொடுக்கப்பட்டு பெருமாளுக்கு கண்டருளப் பண்ணி விமானப்ரதக்ஷிணத்தில் திக்குக்கு இரண்டாக வைக்கப்படும். இந்த விளக்குகளின் விவரமெல்லாம் இந்த உத்தம நம்பி வைபவம் எழுதின நரஸிம்ஹாசார்யருடைய ஸ்ரீரங்கம் கோயில் தத்வம் என்ற (சீக்கிரத்தில் வெளியாகப் போகும்) கிரந்தத்தில் காணலாம்.

பிறகு உத்தமநம்பி அய்யங்காருக்கு தீர்த்தம், சந்தநம், தொங்குபரிவட்டம, மாலை, வேளையம், அபய ஹஸ்தம், படி, ஸ்ரீசடகோபம் முதலான ப்ரஸாதங்களுடன் ஸேவை ஆகும் பெருமாள் சாத்திக்கொண்டிருக்கும் வெள்ளைமாலை, வர்ணமாலை இரண்டும் களைந்து ஸர்வஸ்வ தாநமாக உத்தமநம்பிக்கு ஸாதிக்கப்படும். உத்தமநம்பி குடும்பத்தாருக்கும், மற்றைய விளக்குக்காரர்களுக்கும் ஸேவை

http://acharya.org

ஆகும். உத்தமநம்பி தன் குடும்ப பரிவாரத்துடன் மங்கள வாத்யத்துடன் வெளியே வருகையில் சேனை முதலியார், கருடன், ஆழ்வாராசார்யர்கள்—அவரவர்களுடைய ஸந்நிதிக்கருகில் மாலை ஸாதிப்பார்கள். எடுபிடி சாமான், வாத்யம், இரட்டைக் காப்பந்தம் முதலான வைபவங்களோடு அய்யங்கார் திருமாளிகைக்கு எழுந்தருளி கூட வந்த எல்லா கைங்கர்யபரர்களையும் சாத்துப்படி அடைக்காயமுது கொடுத்து மரியாதை பண்ணி அனுப்புவார்.

இந்த செலவுக்காக தேவஸ்தான திட்டத்தில் நெல், ரொக்கம், ப்ரஸாதம், திருப்பணியாரம் கொடுக்கப்படுகின்றன. இந்த பிரம்மரத மரியாதைக்கு திருக்கார்த்திகை இளவிளக்கு பிரம்ம ரதம் என்று பெயர். உத்தமநம்பி திருமாளிகையில் கோஷ்டி ஆன பிறகு, பெருமாள் தீபஸ்தம்பம் என்னும் சொக்கப்பனை கண்டருள எழுந்தருளுவார்.

---

## தர்மகர்த்தா பாத்யம்

கோயில் நிர்வாஹ பாத்யமும் இப்போதுள்ள தர்மகர்த்தா பாத்யமும் உத்தம நம்பி வம்சத்துக்கு ஆதியிலிருந்து ஜேஷ்ட்ட க்ரமமாகவே வந்துகொண்டிருக்கிறது. ஆனால், 89-வது தலைமுறைக்காரரான உத்தம நம்பி நரஸிம்ஹாசார்யருக்குப் பிறகு, கநிஷ்ட்ட ஸந்ததிகளான உத்தம நம்பி ரங்கஸ்வாமி அய்யங்கார், உத்தம நம்பி ராமஸ்வாமி அய்யங்கார் இருவரும் தர்ம கர்த்தா பதவியிலிருந்தார்கள். ஆகிலும், அந்த பாத்யம் பழைய வழக்கம் போல ஜேஷ்ட்ட ஸந்ததிக்கே வந்துவிட்டது

## உத்தம நம்பி சிங்கு அய்யங்கார்—(2)

இவர்தான் இப்போதுள்ளவர்களில் பெரியவர். வயஸு 73. இவருடைய பேரன்மார்கள் குப்புஸ்வாமி அய்யங்கார்,

http://acharya.org

ரங்கராஜ அய்யங்கார், வேறொரு கிளையைச்சேர்ந்த அண்ணா ஸ்வாமி அய்யங்கார் ஆக நால்வர் இளைய ஸந்தாநத்தைச் சேர்ந்தவர்கள் இப்போதுள்ளனர்.

சக்ரராயர் ஸந்நதி—இதில் இப்போதுள்ளவர் கோவிந்த ராஜ அய்யங்கார்.

---

## ஐந்தாவது அத்தியாயம்

---

## லக்ஷ்மீ காவ்யம்

இது உறையூர் நாச்சியாரான லக்ஷ்மியைப்பற்றின காவ்யம். இதை எழுதினவர் உத்தமநம்பி திருமலாசாரி யர்—82வது உத்தமநம்பி. இது பதினெட்டு ஸர்கமும் ஆயிரத்துக்கதிகமான சுலோகங்களுமுள்ள மஹா காவ்யம்.

உறையூர் ராஜாவான கரிகால் சோழனுக்கு லக்ஷ்மியே திருமகளாய் அவதரித்து ஸ்வயம் வரமாக ரங்கநாதனைப் பங்குனித் திருநாள் 5-வது நாளில் புஷ்யத்தில் திருக்கல் யாணம் பண்ணிக்கொண்டதும் அந்தத் திருநாள் முழு வதும் இந்தக் காவ்யத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு மூன்று ஸர்கங்களில் ஸ்ரீரங்கம் கோயில் கட்ட டம், தேவதைகள், ஆழ்வார் ஆசார்யர்கள், கைங்கர்ய பரர்கள், உத்ஸவங்கள்—எல்லாம் வர்ணிக்கப்படுகின்றன.

உறையூர்நாச்சியாரும் பங்குனி உத்தரமும்-என்ற சிறு நூலில் இந்தக் காவ்யத்தின் முழு விவரமும் ஸாஹித்ய சிரோ மணி ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்காரால் எழுதப்பட்டு 1936-ல் ஸ்ரீரங்கம் தேவஸ்தாந வெளியீடாக அச்சாயிற்று. ஸர். டி. தேசிகாசார்யருடைய ஆதரவில் இந்தக் காவ்யத்தின் முதலிரண்டு ஸர்கம் மட்டும் அச்சிடப்பட்டது.

http://acharya.org

லக்ஷ்மீ காவ்யம் திவ்யஸூரி சரிதம் இரண்டும் வைஷ்ணவ காவ்யங்கள். ஆழ்வார் ஆசார்யர்களுடைய சரித்திரமாய் 74-வது உத்தமநம்பியான கருடவாஹநபண்டிதர் எழுதின திவ்யஸூரிசரிதமும் இந்த லக்ஷ்மீகாவ்யமும் காளிதாஸனுடைய ரகுவம்சத்தை அனுஸரித்து எழுதப்பட்டன. ரகு வம்சத்தில் இந்துமதி ஸ்வயம்வரம், பல நாட்டு மன்னர்களின் வர்ணநம், கல்யாணத்துக்குப்பிறகு யுத்தம்-இருப்பது போல, திவ்யஸூரி சரிதத்தில் ஆண்டாள் ஸ்வயம்வரம், அதற்கு வந்த திவ்யதேச எம்பெருமான்களின் வர்ணநம், யுத்தத்துக்கு பதிலாக திருமங்கையாழ்வார் வேடுபறியும்,—லக்ஷ்மீகாவ்யத்தில் அப்படியே ஸ்வயம்வரமும், அதற்காக வந்த சில சிவாலய மூர்த்திகள் திவ்யதேச எம்பெருமான்களின் வர்ணநம், ஸ்வயம் வரத்துக்குப் பிறகு வ்யாக்ராஸுரனோடு யுத்தமும், அவனுடைய வதமும் காண்கின்றன.

கும்பகோணம் காலேஜில் தமிழுக்குத் தேசிகராய் விளங்கின ஆழ்வார் திருநகரி அப்பு அய்யங்காரென்னும் சடகோப ராமாநுஜாசார்யர் (MOL) ஓலைப்ரதி சிலா சாஸநங்களில் நல்ல ஆராய்ச்சிக்காரர், லக்ஷ்மீ காவ்யம் முதலிய பல அருமையான ஏட்டுப் புஸ்தகங்களைத் தேடித் திரட்டி வைத்திருந்தார். 1937-ல் திருவநந்தபுரத்தில் நடந்த ஓரியண்டல் கான்பரன்ஸுக்கு சடகோப ராமாநுஜாசார்யர் லக்ஷ்மீ காவ்யத்தைப்பற்றி இங்கிலீஷில் ஒரு கட்டுரை எழுதினர். அது 1938-ல் கும்பகோணம் காலேஜ் பத்திரிகையில் வெளியாயிற்று. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

ரங்கநாதனைப் பற்றி லக்ஷ்மீ காவ்யம் எழுதின கவி திருமலாசார்யர் ரங்கநாச்சியாரைப்பற்றி ஆநந்த லஹரியும்

http://acharya.org

ஸௌந்தர்ய லஹரியும் எழுதினர். ஒவ்வொரு லஹரியி லும் நூறு ச்லோகங்கள் உண்டு. மணவாளமாமுனிகளின் நியமனத்தால் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா இந்த லஹரி களுக்கு வ்யாக்யானம் எழுதினர். இந்தக் கவி லாவண்ய லஹரி மாதுர்யலஹரிகளும் எழுதியிருப்பதாக அண்ணா வ்யாக்யானத்திலிருந்தே தெரிகிறது. முன்னிரண்டு லஹரிகள் தான் கிடைத்தன; பின்னிரண்டும் கிடைக்கவில்லை.

கவியின் தகப்பனர் சக்ர ராயர்; தாயார் லக்ஷ்மி. கவி தம்முடைய பெரிய தகப்பனர் 80-வது உத்தம நம்பிபோல தாமும் விஜய நகர ராஜா கஜ வேட்டை ப்ரௌடதேவ மஹாராயரால் ஆதரிக்கப்பட்டு பஹுமானங்கள்பெற்றதாகச் சொல்லுகிறார். இவருடைய மாளிகையின் மேல் விமானத் தில் வைக்க ஸ்வர்ண ஸ்தாபி (தங்கக் கலசம்), முத்துக் குடைகளும், திருச்சின்னம் இரட்டை காப்பர்தம்—முத லான ராஜ மரியாதைகளும் கவிக்கு ராஜாவால் கொடுக்கப் பட்டன.

இவர் மணவாளமாமுனிகள் காலத்திலிருந்த கவி. ஸமீப காலத்தில் மாமுனிவர் திருநாடு அலங்கரித்ததையும், அவருடைய பிரதான சிஷ்யரான வாதூல வரதாசார்யரென்ற கோயிலண்ணனுடைய குமாரரான வாதூல வெங்கடா சார்யரையும் கவி தம்முடைய காவ்யத்தில் பிரஸ்தா விக்கிறார். கவி இற்றைக்கு 500 வருஷத்துக்குமுன் இருந்தவர்.

[79, 80-வது உத்தம நம்பிகளில் சொன்ன விவரம் முழுதும் இந்தக் காவ்யத்திலுள்ளதே.]

http://acharya.org